பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 06 திங்கட்கிழமை 22.07.2019 கதிர் 259

**இனி இது ரகசியம் அல்ல!**

'நாய் வாலை நிமிர்த்துதல்' – என்பார்கள். அப்படி ஒரு முயற்சியில் ஈடுபட்டுக் களைத்துப் போயிருக்கின்றது யாழ். ஊடக மையம்.

கட்சிகளும் தரப்புகளும் வெறுமனே ஊடக சந்திப்பை நடத்தும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதை விடுத்து பக்கம் 02 »

# கோரிக்கைகள் நிறைவேறும்வரை அமைச்சுப் பொறுப்பை ஏற்கோம்!

## முஸ்லிம் காங்கிரஸ் திடமான முடிவு

கொழும்பு, ஜூலை 22

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்குத் தீர்வை வழங்கும் வரை அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இந்தத் தகவலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான



# முதுகெலும்பற்ற அரசு வீடு செல்லவேண்டும்!

## நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி தேவாலயத்தின் திறப்புவிழா நிகழ்வில் பேராயர் மல்கம் காட்டம்

கொழும்பு, ஜூலை 22

முடிவுகளை எடுக்கமுடியாத முதுகெலும் பற்ற தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பைச் செய்யக் கூடியவர்களிடம் கையளித்துவிட்டு வீடு செல்ல வேண்டும்.

- இவ்வாறு நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி தேவாலயத்தில் நேற்று நடைபெற்ற ஆராதனையின் பின்னர் ஆற்றிய உரையில் கூறினார் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை. பக்கம் 11 »



## கேப்பாப்புலவுக்கு நேற்று விஜயம் செய்த ஐ.நா. குழு

### போராட்டம் நடத்தும் மக்களுடன் சந்திப்பு





முல்லைத்தீவு, ஜூலை 22

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கான செயற்பாட்டுக் குழுவினர் முல்லைத்தீவு கேப்பாப் பக்கம் 11 »

## இளைஞனின் முதுகுப் பக்கம் பாய்ந்த துப்பாக்கி ரவை இதயத்தை தாக்கியது

### சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைஞனின் முதுகுப் பக்கமாகப் பாய்ந்த துப்பாக்கி ரவை முதுகெலும்பில் பட்டுத் திருப்பமடைந்து இதயத்தைத் தாக்கியுள்ளது என்று சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் பக்கம் 11 »

## ஒரு சமூகத்தை அரவணைப்பதாகக் கூறி அவர்களின் காலடியில் கிடக்கமுடியாது!

### அமைச்சர் மனோ கணேசன் அதிரடிக் கருத்து



மட்டக்களப்பு, ஜூலை 22

மற்றைய சமூகத்தை அரவணைக்கின்றோம் என்று கூறிக்கொண்டு அந்தச் சமூகத்தின் காலடியில் கிடப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது எனத் தேசிய ஒருமைப்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்த அமைச்சின் பக்கம் 11 »

## வாகரையில் விக்கி



மட்டக்களப்பு, ஜூலை 22

வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கதிரவெளி கிராமத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயற் பக்கம் 11 »

## சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனின் உடலைப் பார்க்க வந்த நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 22

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இளைஞனின் சடலத்தைப் பார்வையிட யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த 4 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் பக்கம் 11 »

## சிவசக்தி ஆனந்தன் எம்.பியை மறந்துபோன பிறேமச்சந்திரன்

### கூறுகின்றார் சித்தார்த்தன் எம்.பி.

வவுனியா, ஜூலை 22

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கூறிய சுரேஷ் பிறேமச்சந்திரன் அதனைத் தனது கட்சி எம்.பியான சிவசக்தி ஆனந்தனுக்குக் கூற மறந்து பக்கம் 11 »

## முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதம்!

### அடித்துக் கூறுகின்றார் ரணில்

கொழும்பு, ஜூலை 22

வெவ்வேறு வழிமுறைகளை ஏற்படுத்தி, ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதம் மீண்டும் இலங்கையில் தலைதூக்காத வகையில் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது.

– இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாத்தறையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற பக்கம் 11 »



## வேட்பாளர் சர்ச்சைக்கு ஓகஸ்ட்டில் முடிவு தமிழ், முஸ்லிம் மக்கள் எமக்கே ஆதரவு!

### மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 22

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற சர்ச்சைக்கு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி முடிவு கிடைக்கும்.

– இவ்வாறு எதிர்க்கட் பக்கம் 11 »

# சர்வதேசத்தின் ஊடாக அரசுக்கு காலக்கெடு விதிக்க வேண்டும்!

## சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 22

சர்வதேச இராஜதந்திரிகளூடாக அரசுக்கு காலக்கெடு வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற நலிவுற்றுப்போன நல்லாட்சியும் தமிழ் மக்களின் எதிர்காலமும் எனும் கருத்தாய்வு நிகழ்வில், கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஆட்சியிலுள்ள தற்போதைய அரசு தமிழ் மக்களின் பிரதிநிதிகளான 14 பேருடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. நாட்டில் அரசியல் குழப்பம் வரும்போது எமது அரசியல் தலைவர்களும், சட்டத்தரணிகளும் இரவு, பகலாக நீதிமன்றத்திலே போராடித் தற்போதுள்ள பிரதமரின் பதவியை காப்பாற்றிக் கொடுத்திருக்கின்றனர்.



இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது கொழும்பில் உள்ள அத்தனை இராஜதந்திரிகளையும் அழைத்து நான்கரை வருடங்களாக நாம் அரசுக்கு ஆதரவு வழங்கியபோதிலும் இந்த அரசாங்கம் அரசியல் தீர்வில் இருந்து அத்தனை விடயங்களிலும் எம்மை ஏமாற்றியிருக்கின்றது. இன்னும் மூன்று மாதங்களில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் போக இருக்கின்றார்கள். இந்த நிலையில் நாங்கள் தொடர்ந்தும் இந்த அரசுக்கு ஆதரவு வழங்க முடியாது இருக்கிறது.எனவே ஒரு வாரத்தில் அல்லது ஒரு மாதத்தில் எமது மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்க்காது விட்டால் நாம் எமது ஆதரவை நீக்கி கொள்ளவுள்ளோம் என்கின்ற செய்தியை சொல்ல வேண்டும்.

இந்த நிலையில் அவர்களுக்கும் அடுத்த ஜனாதிபதியாக யாரை கொண்டு வருவது என்ற எதிர்பார்ப்பு இருக்கின்றது.அது தற்போதைய ரணிலா அல்லது மகிந்த தரப்பில் உள்ள ஒருவரை கொண்டு வருவதா என்ற நிலை அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கும் உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை பொறுத்தவரை வடக்கு – கிழக்கில் உள்ள சிறுபான்மையினரின் வாக்கே தீர்மானிக்கும் சக்தி என்பதால் சர்வதேசமும் தமக்கு தேவையாக உள்ள தற்போதைய அரசை தக்க வைக்க வேண்டும் என்பதால் இந்த அரசை வைத்து தீர்க்கக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்கும்.

இன்று தொல்லியல் திணைக்களம் வடக்கு – கிழக்கில் எமது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அத்தனை இடங்களையும், சின்னங்களையும் வைத்துள்ளது.இந்த திணைக்களத்தின் அமைச்சர் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசிற்கு கீழ்தான் உள்ளார். இவ்வாறு இருக்கையில் இற்றைவரை இந்த அமைச்சரை இவ்வாறான விடயங்களில் தலையிடுவதை நிறுத்த முடியாமல் தான் உள்ளது.

ஆகவே தற்போதுள்ள ஒரு சந்தர்ப்பம் சர்வதேச இராஜதந்திரிகளை அழைத்து அரசுக்கு கால அவகாசத்தை வழங்கிச் செய்ய வைக்கக்கூடிய விடயங்களைச் செயற்படுத்தவேண்டும். இல்லையேல் ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்காவும், சீனாவும், இந்தியாவும் யார் வர வேண்டும் என நினைக்கின்றனரோ நாமும் அவர்களை வரவைப்போம் என்பதனை நினைவுபடுத்த வேண்டும் – என்றார்.

மன்னார் பொது அமைப்புக்களின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் த.வசந்தராஜா, தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத்தலைவர் லி.நவநீதன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், ஆகியாரின் சிறப்பு அரசியல் சமூக விழிப்புணர்வுகள் தாங்கிய கருத்தாடல் நடைபெற்றிருந்தது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண முன்னாள் அமைச்சர்களான அனந்தி சசிதரன், ஐங்கரநேசன் மற்றும் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், லிங்கநாதன், தியாகராசா, ஈரோஸ் அமைப்பின் தலைவர் துஸ்யந்தன் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# கூட்டு எதிரணியில் ஐந்து வேட்பாளர்கள்!

கொழும்பு, ஜூலை 22

கூட்டு எதிரணியில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐந்து பேரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்ட ஐவரில் ஒருவரை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்வார் என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடே அறியும்படி ஒகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி எமது ஜனாதிபதி வேட்பாளரை நாங்கள் அறிவிக்கவுள்ளோம். ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் அனைவரினதும் இணக்கப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட்டுள்ள வேட்பாளர்களில் தகுதியான ஒருவரை தெரிவு செய்யும் பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் கல்வித் தகைமைகளை வெளிப்படுத்த வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளரின் கல்விப் பொதுத்தராதர சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை முடிந்தால் வெளிப்படுத்துமாறு கூறுகின்றோம். எமது தரப்பில் நிறுத்தப்படும் வேட்பாளரின் கல்வி தகைமைகளை வெளிப்படுத்த நாங்கள் தயாராகவே உள்ளோம் – என்றார். (ஐ)

# தபால் ஊழியர்கள் இன்று முழு நாளும் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில்!




சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஒன்றிணைந்த தபால் சேவைகள் தொழிற்சங்க ஊழியர்கள் நேற்று (21) நள்ளிரவு முதல் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளனர் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, நேற்று நள்ளிரவு 12 மணி முதல் இன்று நள்ளிரவு 12 மணி வரையில் அனைத்து தபால் ஊழியர்களும் சுகவீன விடுமுறை எடுக்கவுள்ளனர் எனவும் தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சித்தக பண்டார அறிவித்துள்ளார்.

# ஐ.தே.கவை விட்டுச் சென்றோர் பலரும் மீளவும் ஐ.தே.கவின் புதிய கூட்டணியில்!

## பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தகவல்

மஹிந்த ராஜபக்ஷ அணியினருடன் சேர்ந்து கொண்டுள்ள முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சகலரும் இப்போது ஐ.தே.க. புதிதாக உருவாக்கும் கூட்டணியுடன் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர் என பிரதி அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்தார்.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உருவாக்கத்தினால், அதிருப்தியில் உள்ள – வாக்குப் பலமுள்ள – ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய கூட்டணியுடன் இணைந்து கொள்வார்கள் எனத் தாங்கள் எதிர்பார்க்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

வெற்றி பெறும் கூட்டணியுடன் அணிசேர்வது என்பது யதார்த்தமானது. அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைக்கும் இந்த உறுப்பினர்கள் சகலருடனும் ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்வது இலகுவானது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு அப்பாலும் சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஊடக மையம் தீர்மானித்திருக்கின்றது. அதன்படி கட்சிகள், தரப்புகள், குழுக்கள், அமைப்புகளை அழைத்து, அவற்றுடன் செய்தித் தேடலுக்கான ஊடக சந்திப்புகளை நடத்துவதற்கு அப்பால் அவற்றுடன் ஆக்கபூர்வமானகலந்துரையாடல்களை நடத்தவும் ஊடக அமையம் தீர்மனித்தது.

அதன்படி, முதல்கட்டம்தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், மணிவண்ணன், சுகாஷ் என்று உயர்மட்ட அணி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் பங்குபற்றியது. ஊடகவியலாளர்கள் தரப்பில் அமையத்தின் செயற்குழுவைச் சேர்ந்த சுமார் பதினைந்து உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

சமூகத்துக்கு – இனத்துக்கு – ஏதேனும் பயனுள்ள காரியம் செய்ய வேண்டும் என்பதில் துடிப்புள்ளஊடகவியலாளர்கள்அந்தப் பாணியில் தமது முயற்சிகளை ஆரம்பித்தனர்.

ஏற்கனவே மிலேனியத்தின் ஆரம்பத்தில், விடுதலைப் புலிகளால் சமூகத் துரோகிகள்' என அடையாளம் காணப்பட்ட – காட்டப்பட்ட – கட்சிகள், ஒட்டுக்குழுக்கள், முன்னாள் இயக்கங்களை 'பிராயச்சித்தம்' செய்தவர்களாக்கி, விடுதலைப் புலிகளினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் பிரதிநிதித்துவக் குழுக்களாக – தமிழ்க் கூட்டமைப்பாக – அரசியலில் புனர்ஜென்மம் எடுக்க வைத்தவர்கள் கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அதேபோன்ற ஒரு முயற்சியைத்தான் மேற்படி தமிழ்த் தேசிய முன்னணியுடனான சந்திப்பில் யாழ். ஊடக அமையத்தினர் முதலில் எத்தனித்தனர்.

தமிழ்க் கூட்டமைப்புக்கு மாற்றான தரப்புகளை ஒரு மெகா கூட்டணியாக மாற்றும் இந்த முயற்சிகளைத்தான் நாய்வாலை நிமித்தும் எத்தனமாக" நான் இப்பத்தியின் ஆரம்பத்தில் அடையாளப்படுத்தினேன்.

நான் குறிப்பிட்டபடி அந்த முயற்சி நாய்வாலை நிமிர்த்தும் எத்தனமாகவேதோற்றுப்போனது.

அதுவல்ல விடயம். அந்தப் பேச்சின் இடையே மக்கள் முன்னணித் தரப்பில் கூறப்பட்ட சில நிலைப்பாடுகள் பற்றிய தகவல்கள்தான் கவனிக்கத் தக்கவை. எத்தகைய மிதப்பின் உச்சத்திலே 24 கரட்' காட்போர்ட் அரசியல் வீரர்கள் உள்ளனர் என்பதை மக்களுக்கு உணர்த்த அந்த நிலைப்பாட்டை அம்பலப்படுத்துவது நல்லது என்று நினைக்கிறேன்.

சுரேஷ் பிறேமசந்திரனை விட்டு விட்டு வேறு தரப்புகளைத் தமது கூட்டணியில் இணைத்துக் கொண்டு நீதியரசர் விக்னேஸ்வரன் வரலாம். அனந்தி சசிதரன். ஐங்கரநேசன் எல்லாம் அதில் இடம்பெறலாம். அதற்கு எமக்கு ஆட்சேபம் இல்லை. அப்படி சுரேஷ் பிறேமச்சந்திரன் தரப்பை தவிர்த்து விட்டு அவர் வருவாரானால் அவருடன் ஐம்பதுக்கு ஐம்பது என்ற அடிப்படையில் உடன்பாடு செய்து கொள்ள நாம் தயார்" – என்று 24 கரட. தரப்பினர் விளக்கம் கூறினராம்.

"அது என்ன 'ஐம்பதுக்கு ஐம்பது' விவகாரம்?" – என்று கூட்டத்தில் பங்குபற்றிய ஓர் ஊடகவியலாளரைக் கேட்டேன். பதில் எனக்கு அதிர்ச்சியைத்தருவதாக இருந்தது.

நீதியரசர் விக்னேஸ்வரனின் கட்சிக்கும் அவருடன் கூட்டமைத்து வரும் தரப்பினருக்கும் ஐம்பது வீத இடங்கள், பங்குகள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிப் பக்கத்தில் வரும் தரப்புகளுக்கு ஐம்பது வீதம் என்பதுதான் அவர்களின் கருத்து வெளிப்பாடு." – என்று தகவல் வெளியிட்டார் அந்த ஊடகவியலாளர்.

புதிய கூட்டமைப்புக்குத் தலைமை தாங்க வாருங்கள்!' என்று விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்தவர்கள், அந்தக் கூட்டமைப்பில் விக்னேஸ்வரன் தரப்புக்கு ஐம்பது வீதமும், தங்களுக்குச் சரிசமமாக எஞ்சிய ஐம்பது வீதமும் என்று கணக்குப் போடுவது கொஞ்சம் ஓவர்' ஆகத்தான் எனக்குத் தோன்றுகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசர்களே...?

இவர்களை சமரசப்படுத்தி, ஒருபுதியகூட்டமைப்பைஏற்படுத்தி, அதன் மூலம் வரலாற்றில் தங்கள் பெயரையும் வலிமையாகப் பதிவு செய்து கொள்ளலாம் என்ற நப்பாசையில் யாழ். ஊடக மையம் மேற்கொண்ட இந்த நடவடிக்கையை நாய் வாலை நிமிர்த்தும் முயற்சி' என்று நான் குறிப்பிட்டது தவறு என நினைக்கின்றார்களா நமது வாசகர்கள்?

- மின்னல் -

## வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை.22

யாழ் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள கொழும்புத்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரி வுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக் கொள்ளலாம் என்றும் வளர்ப்பு நாய்களுக் கான உரிமக் கட்டண மாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்றும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

**அந்த வகையில் இன்று திங்கட்கிழமை-**

* காலை 9 மணி முதல் 11 மணி வரை– சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம்.
* முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – மகேந்திரபுரம்.
* பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை – வளன்புரம்.

**நாளை செவ்வாய்க்கிழமை-**

* காலை 9 மணி முதல் 11 மணி வரை– சென் மோரிஸ் கோயில் (A.V)
* முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – (A.V) வீதி புனையிரத வீதி சந்தி.
* பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை – கொழும்புத்துறை விதானையார் வீதி.

**நாளை மறுதினம் புதன்கிழமை-**

* காலை 9 மணி முதல் 11 மணி வரை – பாசையூர் சனசமூக நிலையம்.
* முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – ஈச்சமோட்டை சனசமூக நிலையம்.
* பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை – பதுக்குடியிருப்பு.

# ஐ.தே.க. கூட்டணிக்கு யானைதான் சின்னம்!

## அதில் உறுதியாக உள்ளதாம் தலைமை

கொழும்பு, ஜூலை 22

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் அமைக்கப்படும் கூட்டணியில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு எந்த வேட்பாளர் களமிறங்கினாலும் அவர் யானைச் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த 25 வருடங்களாக ஜனாதிபதி ஒருவரை பெற்றுக் கொள்ளவில்லையெனவும் இதனால், கட்சியும், ஆதரவாளர்களும் அநாதரவாகக் காணப்படுகின்றனர் எனவும் அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்ள முடிந்த தலைவர் ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சி களத்தில் இறக்கும் எனவும் இதற்காகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்ள பாரிய கூட்டணியொன்றை அமைப்பதாகவும் தேர்தலில் வெற்றி கொண்டு நாட்டை அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## புதன் கூடுகிறது சு.க. மத்தியகுழு!

கொழும்பு, ஜூலை 22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாளைமறுதினம் புதன் கிழமை மாலை கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல், புதிய அரசியல் கூட்டணி உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளன.

அத்துடன், மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் சட்டமா அதிபர் ஊடாக உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோருவதற்கு எடுத்த முடிவு தொடர்பில் இதன்போது செயற்குழு உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி விளக்கமளிக்கவுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைக்கும் முயற்சி கைவிடாத பட்சத்தில் அடுத்து எவ்வாறான அரசியல் நகர்வுகளை முன்னெடுப்பது என்பது குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது என தெரியவருகின்றது. (ஐ)

## க.பொ.த. உயர்தரம்

## கொக்குவில் இந்துவில் அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம் ஜூலை .22

கொக்குவில் இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் முதலாந் தடவை தோற்றும் எமது பாடசாலை மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பஞ்சலிகம் கேட்போர் கூடத்தில் வழங்கப்படும். மாணவர்கள் பாடசாலைச் சீருடை அணிந்து பெற்றோருடன் தேசிய அடையாள அட்டையையும் கொண்டு வர வேண்டும்.

இதேவேளை, இரண்டாந் தடவை தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை இன்னமும் கிடைக்கப் பெறவில்லை. கிடைக்கப் பெற்றதும் அறிவித்தல் தரப்படும் என்றும் அதிபர் அறிவித்துள்ளார்.

## பிள்ளையானை சிறைக்குள் சந்தித்தார் மனோ கணேசன்!

மட்டக்களப்பு, ஜூலை 22

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனை அமைச்சர் மனோ கணேசன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மட்டக்களப்புச் சிறைச்சாலையில் சந்திரகாந்தனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.



அரசியல் நலன் விரும்பிகளும் நண்பர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க வே பிள்ளையானைச் சந்தித்தார் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, பொதுவான நடப்பு அரசியல் சம்பந்தமாகவும் கடந்த கால, எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடியதாகவும் அமைச்சர் மனோ கூறினார்.

ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த மூன்று வருடங்களாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன் சிறைவாசம் அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வாக்குறுதியை ரணில் நிறைவேற்றவில்லை

### சிறிதரன் எம்.பி. விசனம்

கிளிநொச்சி, ஜூலை 22

கல்முனை விவகாரம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாமையினாலேயே அவருடனான சந்திப்பைக் கூட்டமைப்பு தவிர்த்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார். நா.யோகேந்திரநாதன் எழுதிய நீந்திகடந்த நெருப்பாறு 3ஆவது நூல் நேற்று முன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், ஈ.சரவணபவன், முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரதமர் வழங்கிய வாக்குறுதிகள் இன்றும் நிறைவேற்றப்படவில்லை. கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்திற்கு இன்றுவரையில் கணக்காளர்




நியமிக்கப்படவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சந்திக்க முயற்சித்த போது, இந்த விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவு வழங்கப்படாமையினால், அவருடனான சந்திப்பை கூட்டமைப்பு தவிர்த்தது.

பிரதமருடனான சந்திப்பு குறித்து இதுவரையில் இறுதி தீர்மானம் எட்டப்படவில்லை – என்றார். (ஐ)

# வெளிவராத இரகசியங்களை போட்டுடைத்தார் ஹேமசிறி?



கொழும்பு, ஜூலை 22

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக சி.ஐ.டியிடம் முன்னர் வெளியிடப்படாத தகவல்களை வெளியிட்டார் எனக் கூறப்படுகிறது.

நீதிமன்ற உத்தரவுப்படி சி.ஐ.டிக்கு 09 மணி நேர அறிக்கை அளித்தபோது இந்தத் தகவல்கள் வெளியானதாக தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் மற்றும் நடவடிக்கை எடுக்கத் தவறியவர்கள் தொடர்பான ஆதாரங்களுடன் ஹேமசிறி முக்கிய தகவல்களை வெளிப்படுத்தினார் எனக் கூறப்படுகிறது.

உளவுத்துறைத் தகவல்கள் பெறப்பட்ட விதம், தகவல்களை அதிகாரபூர்வமாக அறிந்தவர்கள் மற்றும் சம்பவத்தைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறியவர்கள் ஆகியோரை ஹேமசிறி பெர்னாண்டோ முதன்முறையாக வெளிப்படுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல்களுக்கு முன்னர் வெளிநாடுகளில் இருந்து உளவுத்துறை தகவல்கள் எவ்வாறு பெறப்பட்டன என்பதையும், சில கட்சிகள் உயர் தலைவர்களுக்கு எவ்வாறு சரிபார்க்கப்படாத தகவல்களாக அறிவிக்கப்பட்டன என்பதையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

சர்வதேச முறைகளின்படி பெறப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்யத் தவறியவர்கள், மற்றும் 14 நாட்களில் தகவல் எவ்வாறு லேசாக எடுக்கப்பட்டது என்பதையும், இந்தத் தகவல்களை வட்ஸ்அப்பில் பகிர்ந்து கொள்வதன் மூலமும் குற்றவாளிகள் தங்கள் தாக்குதல்களை நடத்துவதற்கான வாய்ப்புக்கள் எப்படி ஏற்படுத்தப்பட்டன என்பதை அவர் வெளிப்படுத்தினார் எனக் கூறப்படுகிறது. (ஐ)

## முஸ்லிம்கள் மீதான முறைப்பாடு குறித்து விசாரணை செய்ய வந்தார் ஐ.நா. பிரதிநிதி

கொழும்பு, ஜூலை 22

கடந்த ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்தின் பின்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள 2000 இற்கும் அதிகமான தவ்ஹீத் ஜமாத் செயற்பாட்டாளர்கள் மற்றும் குருநாகலை வைத்தியசாலை வைத்தியர் சாபி ஆகியோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி க்லெமென்ட் நிஸாலெய்ட் சொசி இலங்கை வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எட்டுநாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர் ஒரு பக்க விசாரணையையே முன்னெடுத்து வருவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம்கள் அச்சுறுத்தல்களுக்கும் தாக்குதல்களுக்கும் முகம் கொடுத்துள்ளனர் எனவும் முஸ்லிம்கள் எந்தக் காரணமும் இன்றிக் கைது செய்யப்படுவதாகவும் தெரிவித்து மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 10 பக்கங்கள் கொண்ட அறிக்கையொன்றை ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

இதன்படியே, ஐ.நா.வின் இந்தப் பிரதிநிதி இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இவர் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருந்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளார். இவர் தனது விசாரணைகளை, இலங்கைக்கு எதிராகச் செயற்படும் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதானிகள், தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோரிடமே மேற்கொள்ளவுள்ளார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தன் நலனைப் பேணுவதில் அமெ. தந்திரமாகவே நடந்து கொள்ளும்

*“இலங்கையில் அடுத்த தேர்தலில் அமைக்கப்படும் எந்தவொரு அரசுடனும் புரிந்துணர்வுடன் செயற்பட அமெரிக்கா தயார். எந்தக் கட்சி அல்லது பிரமுகர் ஆட்சிக்கு வந்தாலும் அந்தத் தரப்புகளுடனும், இலங்கை மக்களுடனும் அமெரிக்க அரசு முன்னெடுத்து வரும் தொடர்புகளுக்கு எந்த வகையிலும் பாதிப்பு வராத வகையில் செயற்படத் தயாராகவுள்ளோம்.”*

– இவ்வாறு கூறியிருக்கின்றார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைய்னா ரொப்லிட்ஸ் அம்மையார்.

அமெரிக்கா – இலங்கை உறவு நிலை குறித்துப் பல்வேறு சந்தேகங்களும், ஊகங்களும் தெரிவிக்கப்படும் நிலையிலேயே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

அமெரிக்காவின் நலன்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யும் வேலைத்திட்டங்களையும் செயல் நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாத இக்கட்டில் அமெரிக்கா இப்போது சிக்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தான் எதிர்பார்த்த செயற்பாடுகளை இலங்கையில் முன்னெடுக்க முடியாத முட்டுப்பட்ட நிலைமையை அமெரிக்கா இப்போது உணர்வதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையுடன் இதுவரை காலமும் தான் பேணி வந்த பாதுகாப்புத் தொடர்பான உடன்பாடுகளைக் கூடத் தொடர முடியாத நெருக்கடி அமெரிக்கத் தரப்புக்கு இப்போது நேர்ந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கையின் அதிகார மையம் பிரதமர், ஜனாதிபதி என்று இரு துருவமயப்பட்ட நிலைப்பாட்டை எடுத்துள்ள சூழலில், தான் நினைத்த செயற்போக்கில் கொழும்பை அசைக்க வைக்க முடியாத திண்டாட்ட நிலைக்குள் அமெரிக்கா சிக்கியிருக்கின்றது.

2015 இல் கொழும்பில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதில் வெளியே தெரியாதபடி மிக ஆழமான பங்களிப்பை அமெரிக்கா முன்னெடுத்திருந்தது என்பது இப்போது பரகசியமான விடயம்.

அந்த ஆட்சி மாற்றத்தின் மூலம் இலங்கையைத் தன் பக்கம் இழுத்து, இலங்கையில் தனது நலனை நன்றாகப் பேணமுடியும் என்றே அமெரிக்கா எதிர்பார்த்தது.

நல்லாட்சி அரசின் ஆரம்பகாலத்தில் அந்த எதிர்பார்ப்பு நிறைவு செய்யப்படும் விதத்திலேயே நிலைமை இருந்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தனக்கு இசைவான செயற்போக்கில் பயணிக்கின்றனர் என்று கண்ட அமெரிக்கா, தன்னுடைய நலன் இலங்கையில் முழு அளவில் பேணப்படுவதாகத் திருப்தி கண்டது.

ஆனால், மைத்திரி – ரணில் முரண்பாடு முற்றி ரணிலின் அரசை , ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018 ஒக்டோபரில் கவிழ்த்து, இலங்கையில் அரசியல் சதிப்புரட்சி ஒன்றை அரங்கேற்றிய போது நிலைமை அமெரிக்காவுக்கு மாறானதாக மாறியது.

ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகு மிக ஓங்கி குரல் கொடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்தபோது நிலைமை மாறிப்போனது.

மைத்திரிபால சிறிசேன, ரணிலின் அரசைக் கவிழ்த்து, முன்னெடுத்த அரசியல் சதிப் புரட்சி ஈற்றில் தோல்வியடைந்து, மீண்டும் ரணிலின் அரசு பதவியேற்ற போதிலும், அமெரிக்காவுக்கு எதிரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கடும் நிலைப்பாடு மாறாது நிரந்தரமானது.

இப்போது பிரதமர் ரணிலின் அரசு அமெரிக்க சார்புப் போக்கைக் கடைப்பிடிப்பதற்கு இலங்கையில் அமெரிக்காவின் நலனை முழு அளவில் பேணுவதற்கு இசைந்தாலும் கூட, பாதுகாப்பு அதிகாரங்களைத் தக்க வைத்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்கு இடம் கொடுக்கின்றார் இல்லை.

காலாவதியாகி இருக்கும் இலங்கையுடனான பாதுகாப்பு உடன்பாடுகளைக் கூட மீளப் புதுப்பிக்க முடியாத பின்னடைவு நிலையில் இன்று அமெரிக்கா உள்ளது.

தன்னோடு முரண்டு நிற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய பதவிக்காலம் இன்னும் மூன்று, நான்கு மாதங்கள்தானே என்று கருதி அதுவரை அமெரிக்கா காலத்தைப் பொறுத்துக் கொண்டு காத்திருக்க முடியும்.

ஆனாலும், மைத்திரியின் பின்னர் அவரது பதவிக்கு வரக் கூடியவர் எத்தகையவர், அவரின் வருகையால் அரசுத் தரப்பிலும் மாற்றங்கள் ஏற்படுமா என்பவை எல்லாம் தெரியாமல், வெறுமனே மைத்திரிபால சிறிசேன போகட்டும் என்று அமெரிக்கா காத்திருக்க முடியாது.

சில சமயங்களில், மைத்திரிபால சிறிசேன ஆட்சியை விட்டு இறங்கும் இவ்வருட இறுதியில், சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த கதையாக அமெரிக்க நலன் இங்கு மேலும் நெருங்கடியில் சிக்கும் சூழ்நிலை ஏற்பட்டு விடலாம்.

இவை எல்லாம் குறித்து அமெரிக்கா ஆழமாகச் சிந்தித்து, நுட்பமாக ஆராய்ந்து, நுணுக்கத்துடன் காய்களை நகர்த்தும் என்பது திண்ணம். அந்த உறுதிப்பாடே அமெரிக்கத் தூதுவரின் தற்போதைய கருத்து வெளிப்பாட்டில் இழையோடி நிற்பதாகக் கருதுகின்றோம்.

# ரவிக்கும் சஜித்துக்கும் இடையே பனிப்போர்





கொழும்பு, ஜூலை 22

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்வதில் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் உப தலைவர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் பனிப்போர் இடம்பெற்று வருகின்றது.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவின் போது பிளவு ஏற்படுமா? என்ற கேள்வி பொதுவாக எழுந்துள்ளது.

அரசியல் களத்தைச் சூடேற்றுவதற்கான ஒரு நாடகமாக இது இருக்கலாம் எனவும் கருத்துக்கள் எழாமலில்லை.

மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை ஜனாதிபதி வேட்பாளரைத் தேடுவதாக நேற்று முன் தினம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள அந்தக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் அறிவிக்கப்படவுள்ளார் எனவும் மஹிந்த அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கக் கூடிய வேட்பாளர்கள் பட்டியலைப் பொதுக் கூட்டங்களில் அறிவிக்கும் போது சஜித் பிரேமதாஸவின் பெயரை விட்டு விட்டே ரவி கருணாநாயக்க கூறி வருகின்றார். தந்தையின் செல்வாக்கை வைத்து ஜனாதிபதியாக வருவதற்குச் சிலர் முயற்சிக்கின்றார்கள் என மறைமுகத் தாக்குதல்களையும் மேடைப் பேச்சுக்களில் தெரிவித்து வருகின்றார். தொகுதியில் கட்சியை வெற்றி பெறச் செய்ய முடியாத மக்கள் ஆதரவு இல்லாத ஒருவர் எனவும் சாடி வருகின்றார் ரவி கருணாநாயக்க.

சஜித் பிரேமதாஸவின் மனைவி ஜலனி பிரேமதாஸவும் அண்மையில் தன்னை எதிர்கால ஜனாதிபதியின் மனைவி எனக் கூறியமையால், ஊடகங்களும் பௌத்த அடிப்படைவாதக் குழுக்களும் பெரும் எதிர்ப்பையும் விசனத்தையும் தெரிவித்தன.

சஜித் பிரேமதாஸவும் கொழும்பிலுள்ள குளிரூட்டப்பட்ட அறைக்குள் இருந்து அரசியல் செய்யும் எமது அணியைச் சேர்ந்த சில நபர்கள் என அமைச்சர் ரவி கருணாநாயக்கவை எல்லா பொதுக் கூட்டங்களிலும் ஊறுகாயைப் போன்று தொட்டுக் கொள்ள தவறுவதில்லை.

இருப்பினும், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரதித் தலைவர் சஜித் சார்பான ஒரு குழுவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சார்பான ஒரு குழுவும் திரைமறைவில் செயற்படுகின்றன என்பது அரசியல் விமர்சகர்களின் வெளிப்படையான கருத்தாகவுள்ளது. (ஐ)

# இராணுவச் சீருடை போன்ற ஆடைகள் பயன்படுத்த தடை

### சட்ட திருத்தத்துக்கு அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, ஜூலை 22

இராணுவச் சீருடைக்கு ஒத்ததான ஆடைகளைப் பயன்படுத்தல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தலைத் தடை விதிக்கும் வகையிலான சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற விதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கொண்டு வரப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

இராணுவச் சீருடைக்கு ஒத்த ஆடைகளை வைத்திருப்பதானது, தேசிய பாதுகாப்புக்குச் சிறந்ததாக அமையாது என்ற அடிப் படையிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

சீருடைக் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களைமேற்கொள்ளும்வகையில் இந்த அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதாக அரசதகவல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இராணுவச் சீருடைகளை வைத்திருக்கின்றமை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றமையினால், காலத் தின் தேவைக்கு ஏற்ற வகையில் இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக்குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி, இராணுவச் சீருடைக்கு ஒத்ததான ஆடைகளை வைத்திருத்தல், ஆடைகளை அணிதல், விற்பனை செய்தல் உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் தடை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பானசட்டதிருத்த வரைவு நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதும் நடைமுறைக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்ப வத்தின் பின்னரே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைளின் போது இராணுவச் சீருடைக்கு ஒத்த பல ஆடைகளைப் படையினர் கைப்பற்றியிருந்தனர்.

இந்த பின்னணியிலேயே அரசு இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் பின்னர் முகத்தை முழுமையாக மறைத்து ஆடைகளை அணியத்தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 15,000 பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் நியமனம்

கொழும்பு, ஜூலை 22

அடுத்த மாதம் 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன எனக் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்குவது தொடர்பாகப் பிரதமருடன் கலந்துரையாடி இது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் அவர் கூறினார். (ஐ)

## நாளை

23.07.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
மு.இ. 11.48 வரை
திதி : ஷஷ்டி பி.ப.12.02 வரை
இராகுகாலம் : 7.28 – 8.58
சுப நேரம் : 11.58 – 01.28

# கிழக்கில் அரசியல் செய்யும் நோக்கம் எனக்கு கிடையாது

## கூறுகிறார் அனந்தி சசிதரன்

கொழும்பு, ஜூலை 22
வடக்கில் உறுதியான நிலையில் தமது கட்சி காலூன்றாத நிலையில் கிழக்கில் அரசியல் செய்வது தமது நோக்கமல்ல என்று, வட மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.
கல்முனையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாங்கள் கூட்டமைப்பைச் சிதைப்பதற்காகக் கிழக்கில் களமிறங்கவில்லை. கூட்டமைப்பு சரியான பாதையில் பயணிக்க வேண்டும் என்பதற்கான அழுத்தத்தைக் கொடுப்பதற்காகவே கிழக்குக்கு விஜயம்செய்கின்றோமே தவிர வாக்குகளை சிதைப்பதற்காகவல்ல.
நாங்கள் வடக்கில் ஸ்திரமான நிலையில் எமது கட்சி காலூன்றாத நிலையில் கிழக்கில் அரசியல்செய்வது நமது நோக்கமல்ல. கூட்டமைப்பின் தலைமை உள்ள கிழக்கு மாகாணத்தில் பல இடங்கள் பறிபோயுள்ளன.
இவற்றைக் கூட கூட்டமைப்பு சரிவரச் செய்யவில்லை. இதன் நிமித்தமே நாங்கள் வடக்கு, கிழக்கு எனப் பாராமல் தமிழர்கள் என்ற நோக்கிலே குரல் கொடுப்பதற்காக வருகின்றோம்.
கிழக்கில் உள்ள மக்கள் தங்களுக்கான சரியான தலைமைகளை தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள். நாங்கள் ஒருபோதும் வடக்கிலிருந்து வந்து கிழக்கிலே தேர்தலில் இறங்கப் போவதில்லை.
விடுதலைப் போராட்டத்தில் கூட பலவற்றை இழந்து இருக்கிறார்கள். வடக்கில் நிலைமை வேறு கிழக்கின் நிலைமை வேறு. காலத்திற்கு காலம் பல்வேறுபட்ட நெருக்கடிகளைக் கிழக்கு மக்கள் அனுபவித்து வருகிறார்கள் .
எனது கணவர் திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்தபடியால் எனக்கும் கிழக்குக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. யாருக்கும் அஞ்சி வடக்கு வேறு, கிழக்கு வேறு என வேறுபடுத்தத் தயாரில்லை.
இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான விடயங்களில் யாரோ ஒருவரது நிகழ்ச்சி நிரலின் கீழ் போய்க் கொண்டு இருக்கிறார்கள்– என்றார்.
(ஐ)



## சுவிஸில் இலங்கையருக்கு எதிராக கொலை வழக்கு!

கொழும்பு, ஜூலை 22
சுவிற்சர்லாந்தின் சோலோதுர்ன் ரயில் நிலையத்தில் 2016ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணை ஆரம்பமாகியுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கையர் ஒருவருக்கு எதிராக கொலை, கொலை முயற்சி, கொலை மிரட்டல் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
கடந்த 2016ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்தின் சோலோதுர்ன் ரயில் நிலையத்தில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. இந்தச் சம்பவத்தில் 29 வயதான இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்கான இந்த இளைஞர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் 49 வயதான இலங்கையர் ஒருவரை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.
இந்தச் சம்பவத்தின்போது சந்தேகநபர், பொதுமக்கள்மீதும் துப்பாக்கியைகாட்டி மிரட்டினார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.
இந்நிலையிலேயே, கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கில் தற்போது நீதிமன்ற விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும், வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் திகதி இன்னும் வெளியிடப்படவில்லை.
(ஐ)

## நினைவுத் தூபிக்கு பிரதேச சபை தடை!

முல்லைத்தீவு, ஜூலை 22
விமானப் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட பொது மக்களுக்கு நினைவுத் தூபி அமைப்பதற்குப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை தடை விதித்துள்ளதாகப் பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.
மந்துவில் பகுதியில் 1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி இலங்கை விமானப் படையினரின் குண்டுவீச்சு தாக்குதலில் 24 அப்பாவிப் பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே பலியாகியிருந்தனர்.
விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட பொது மக்களின் 20ஆம் ஆண்டு நினைவு நாள் விரைவில் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் அவ்விடத்தில் தூபி கட்டுவதற்கு முன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
எனினும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர்களில் இருவர் எதிர்ப்பு தெரிவித்துள்ள காரணத்தினால் நினைவுத் தூபி அமைப்பதற்குப் பிரதேச சபை தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ஐ)

## வடமராட்சி கிழக்கில் வீதிப் புனரமைப்புக்கு அடிக்கற்களை நாட்டார் சுமந்திரன் எம்.பி.





யாழ்ப்பாணம், ஜூலை 22
கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ். வடமராட்சி கிழக்கில் 16 மில்லியன் ரூபா செலவில் ஆழியவளை – கொடுக்கிளாய் வீதியும், 2 கோடி 40 இலட்சம் ரூபா செலவில் வத்திராயன் – வாரிவட்டன் வீதியும் புனரமைக்கப்படவுள்ளன.
இந்த வீதிகளின் புனரமைப்பு வேலைகளுக்கான அடிக்கற்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று முன் தினம் நட்டு வைத்தார்.
இந்த நிகழ்வுகளில் பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் அ.சா. அரிய குமார், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் மற்றும் மருதங்கேணிப் பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.
(ஐ)

## குண்டுத் தாக்குதலில் சேதமடைந்த மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தைப் பார்வையிட்டார் விக்கி





மட்டக்களப்பு, ஜூலை 22
உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தை தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.
பலரது உயிரைப் பலிவாங்கிய ஏப்ரல்–21 இல் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் சேதமடைந்துள்ள மட்டக்களப்பு தேவாலயம் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் கூட்டணியின் அரசியல் செயற்பாட்டை வலுப்படுத்தும் முகமாக கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அணியுடன் கிழக்கில் தங்கியிருந்து மக்கள் சந்திப்புகளை மேற்கொண்டுவரும் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கடந்த சனிக்கிழமை மாலை சியோன் தேவாலயத்திற்குச் சென்று பார்வையிட்டுள்ளதுடன் சியோன் தேவாலயத்தின் பாதிரியார் மற்றும் தொண்டர்களிடம் புனரமைப்புப் பணிகள் குறித்தும் கேட்டறிந்தார்.
இதன்போது தமிழ் மக்கள் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் சோமசுந்தரம், நிர்வாக உப செயலாளரும் கிளிநொச்சி மாவட்ட குழு உறுப்பினருமான ஆலாலசுந்தரம், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் அன்ரனி கெப்ரியல், ஊடகம் மற்றும் செயற்திட்ட ஆக்கத்திற்கான உப செயலாளர் த.சிற்பரன், இளைஞர் அணி இணைப்பாளர் கிருஷ்ணமீனன், மத்தியகுழு உறுப்பினர் இரா.மயூதரன், கணக்காளர் ராஜா துரைசிங்கம் மற்றும் ஊடக உதவியாளர் சதீஸ் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.
கல்முனை உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி கடந்த ஏப்ரல்–21 ஆம் திகதி தமிழ் உணர்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நடை பயணத்தில் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டிருந்த வேளையில்தான் இக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றிருந்தது.
அதனையடுத்து நடைபயணம் நிறுத்தப்பட்டிருந்தது. உடனடியாக மட்டக்களப்பு மருத்துவமனைக்கு நேரில் சென்று காயப்பட்டவர்களை பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
(ஐ)

# 3 முறை டில்லி முதல்வரான ஷீலா தீட்சித் காலமானார்



மூன்று தடவைகள் டில்லி முதலமைச்சராக இருந்த காங்கிரஸ் மூத்த தலைவர் ஷீலா தீட்சித் நேற்றுமுன்தினம் மதியம் காலமானார்.

இந்திய ஜனாதிபதி, பிரதமர் உள்பட தலைவர்கள் அவரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

டில்லி மாநில காங்கிரஸ் தலைவராக இருந்துவந்தவர் ஷீலா தீட்சித். காங்கிரஸ் மூத்த தலைவரான அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு டில்லியில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். அங்கு சனியன்று பிற்பகல் 3.55 மணிக்கு அவர் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 81.

அவர் முதல் முறையாக 1984 ஆம் ஆண்டு உத்தரபிரதேச மாநிலம் கன்னுஜ் மக்களவை தொகுதியில் இருந்து எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். ராஜீவ் காந்தி மந்திரிசபையில் அவர் மத்திய மந்திரியாகவும் பணியாற்றினார்.

பின்னர் 1998ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை 15 ஆண்டுகள் தொடர்ந்து 3 முறையாக டில்லி முதலமைச்சராக இருந்தார். கேரள மாநில ஆளுநராகவும் பணியாற்றி உள்ளார். சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வடக்கு – கிழக்கு டில்லி தொகுதியில் போட்டியிட்டு வெற்றிவாய்ப்பை இழந்தார்.

# கர்நாடகாவில் குமாரசாமி அரசின் தலையெழுத்து இன்று முடிவாகும்?

## நம்பிக்கைப் பிரேரணை மீது குரல் வாக்கெடுப்பு நடக்கும்



பெங்களூரு,ஜூலை22

கர்நாடகாவில் கடந்த 20 நாள்களாக நிலவும் அரசியல் நிலைவரங்கள் குறித்த விரிவான அறிக்கையை மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு, மாநில ஆளுநர் வஜுபாய் வாலா அனுப்பியுள்ளார்.

அதில் அரசு இயந்திரம் எந்தெந்த வகையில் முடங்கி உள்ளது என்பதை சுட்டிக்காட்டி இருப்பதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே, கர்நாடக சட்டப்பேரவையில் இன்று குமாரசாமி அரசு மீதான நம்பிக்கை பிரேரணையின் மீதான விவாதம் மீண்டும் வர உள்ளது. இதைத்தொடர்ந்து குரல் வாக்கெடுப்பு நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கர்நாடக மாநிலத்தில் கடந்த முதலாம் திகதி காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஆனந்த்சிங் பதவியை ராஜினாமா செய்து சபாநாயகரிடம் கடிதம் கொடுத்த நாள் முதல், அரசியல் குழப்பம் தலை தூக்கியது. .

இதனால், கர்நாடகாவில் ஆட்சி செய்து வரும் ம.ஜ.த. – காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு பின்னடைவு ஏற்பட்டது. கூட்டணி கட்சிகளின் எம்.எல்.ஏ.க்கள் 16 பேர் ராஜினாமாச் செய்தமையால், பெரும்பான்மையை இழந்துள்ள முதல்வர் குமாரசாமி பதவியை ராஜினாமாச் செய்யவேண்டும் என பா.ஜ.க. மாநில தலைவர் எடியூரப்பா வலியுறுத்திவந்தார்.

இந்தப் பரபரப்பான சூழ்நிலையில், கடந்த 20 நாள்களாக மாநில அரசியலில் நிலவும் பரபரப்பான நிகழ்வுகள் குறித்த விரிவான அறிக்கையை ஆளுநர் வஜுபாய் வாலா மத்திய உள்துறை செயலாளருக்கு அனுப்பி வைத்தார். அதில், கடந்த 12 ஆம் திகதி சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் தொடங்கிய நாள் முதல் வெள்ளிக்கிழமை வரை அவையில் நடந்த விவாதங்கள், கடந்த 18 ஆம் திகதி முதல்வர் குமாரசாமி தனது அரசு மீது நம்பிக்கை கோரும் பிரேரணையைத் தாக்கல் செய்தமை, அதன் மீது நடந்துவரும் விவாதம், நம்பிக்கை கோரும் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தாமல் தவிர்த்துவருகின்றமை தொடர்பாக பா.ஜ.க. சார்பில் தன்னிடம் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஜூலை 19 ஆம் திகதி பகல் 1.30 மணிக்குள் வாக்கெடுப்பு நடத்தக்கோரி முதல்வர் குமாரசாமிக்கு கடிதம் எழுதியமை, அதை செயல்படுத்தாமல் அலட்சியப்படுத்தியமையால் மாலை 6 மணிக்குள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று இரண்டாவது நினைவூட்டல் கடிதம் முதல்வருக்கு எழுதியமை, ஆனால், தனது கடிதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அலட்சியப்படுத்தியது மட்டுமல்லாமல், தனது (ஆளுநர்) அதிகாரம் தொடர்பாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் அவையில் எழுப்பிய கேள்விகள் தொடர்பான விவரங்கள் உள்ளிட்ட பல் வேறு தகவல்களை ஆளுநர் தனது அறிக்கையில் விரிவாக குறிப்பிட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. மேலும், மாநில சட்டப்பேரவையில் உள்ள மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் ஆளும் கூட்டணியில் 15 எம்.எல்.ஏக்கள் மற்றும் 2 சுயேச்சைகள் ஆதரவு குறைந்துள்ளதன் மூலம் பெரும்பான்மை இல்லாமல் ஆட்சி நடக்கிறது.

இதனால் அரசு இயந்திரம் கடந்த 20 நாள்களாக எந்தெந்த வகையில் முடங்கியுள்ளது என்ற விவரத்தையும் ஆளுநர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிகிறது. இதற்கிடையே, கர்நாடக சட்டப்பேரவை 2 நாள் விடுப்புக்கு பின்னர் இன்று மீண்டும் கூடுகிறது. அப்போது, முதல்வர் குமாரசாமி அரசு மீதான நம்பிக்கை பிரேரணையின் மீதான விவாதம் மீண்டும் எடுத்துக் கொள்ளப் பட உள்ளது. அதைத் தொடர்ந்து குரல் வாக்கெடுப்பு நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஈரான் மடக்கி வைத்திருக்கும் இங்கிலாந்துக் கப்பலின் 23 மாலுமிகளில் கப்டன் உட்பட 18 பேர் இந்தியர்கள்!

## அவர்களைப் பத்திரமாக மீட்பதற்கு புதுடில்லி தீவிர முயற்சி




லண்டன், ஜூலை22

ஈரான் சிறை பிடித்துள்ள இங்கிலாந்து எண்ணெய் கப்பலில் பயணம் செய்த மாலுமிகளில் 18 பேர் இந்தியர்கள் எனத் தெரிய வந்துள்ளது. அவர்களை பத்திரமாக மீட்க இந்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சுவீடன் நாட்டின் ஸ்டீனா பல்க் என்ற கம்பெனிக்கு சொந்தமானது, ஸ்டீனா இம்பெரோ எண்ணெய் கப்பல்.

இந்த கப்பல் இங்கிலாந்து கொடி ஏந்தி சென்று கொண்டிருந்தபோது, பாரசீக வளைகுடா பகுதியில் உள்ள ஹோர்முஸ் ஜலசந்தி பகுதியில் ஈரான் அதனைப் பிடித்துள்ளது.

தங்கள் நாட்டின் மீன்பிடி படகுடன் மோதியதால் தான் இந்த கப்பலை சட்டப்படி பிடித்து வைத்துள்ளதாக ஹோர்மோஸ்கான் துறைமுக தலைமை இயக்குநர் அல்லா மொராத் அபிபிபூர் கூறி உள்ளார்.

இருப்பினும் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கும், ஈரானுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிற நிலையில், இந்தக் கப்பலை ஈரான் தடுத்து வைத்திருப்பது பதற்றத்தை அதிகரித்து உள்ளது.

இந்த கப்பலில் 23 மாலுமிகள் பயணம் செய்தனர். அவர்களில் கப்டன் உள்ளிட்ட 18 பேர் இந்தியர்கள் ஆவர். மற்றவர்கள் ரஷ்யா, லாத்வியா, பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

இதை உறுதிசெய்த கப்பல் கம்பெனியின் தலைவர் எரிக் ஹானல், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக இங்கிலாந்து மற்றும் சுவீடன் அரசுகளை தொடர்பு கொண்டு வருகிறோம். நாங்கள் மாலுமிகளின் குடும்பங்களுடன் தொடர்பில் இருக்கிறோம். மாலுமிகளுக்கு காயம் எதுவும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. அவர்கள் பாதுகாப்பிலும், நலனிலும் கவனம் செலுத்துகிறோம் என்று கூறினார்.

இதற்கிடையே ஈரானில் சிறை வைக்கப் பட்டுள்ள கப்பலில் சென்றுள்ள இந்தியர்களை மீட்க இந்திய அரசு நடவடிக்கையில் இறங்கி உள்ளது.

இதுபற்றி மத்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரவீஷ் குமார் டெல்லியில் நேற்று கூறும்போது, இந்தச் சம்பவம் தொடர்பான கூடுதல் தகவல்களை அறிந்து வருகிறோம். அங்கு சிக்கியுள்ள நமது மாலுமிகளை கூடிய விரைவில் பத்திரமாக மீட்கவும், இங்கு கொண்டு வந்து சேர்க்கவும் ஈரான் அரசுடன் அங்குள்ள இந்திய தூதரகம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது என குறிப்பிட்டார்.

இதற்கிடையே இந்த விவகாரத்தை இங்கிலாந்து கடுமையாக எடுத்துக்கொண்டுள்ளது.

இது குறித்து இங்கிலாந்து வெளியுறவு மந்திரி ஜெரேமி ஹண்ட் கருத்து தெரிவிக்கையில், ஸ்டீனா இம்பெரோ எண்ணெய் கப்பலை ஈரான் பிடித்து வைத்திருப்பதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. கப்பல்கள் சுதந்திரமாக சென்று வருவது பராமரிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்

மேலும், சட்டவிரோதமான, நிலைத்தன்மையற்ற நடத்தையால் ஈரான் ஆபத்தான பாதையை தேர்வு செய்கிறது எனக் கருதுகிறோம். இந்தப் பிரச்சினையில் விரைவான தீர்வு காணப்படாவிட்டால், கடும் விளைவுகளை ஈரான் சந்திக்க நேரிடும் என அவர் எச்சரிக்கை விடுத்தார்.

# அமெ. எதிரான பொருளாதாரப் போராட்டத்தில் சீனாவுடன் இந்தியாவும் கைகோர்க்க வேண்டும்

## புதுடில்லிக்கு பீஜிங் அழைப்பு

பீஜிங்,ஜூலை22

'அமெரிக்காவின் ஒருதலைப்பட்சமான வர்த்தக கொள்கைகளுக்கு எதிராக சீனா போராடி வருகிறது. இந்த போராட்டத்தில் இந்தியாவும் இணைய வேண்டும்' என சீனா கோரிக்கை விடுத்துள்ளது.


சீனாவின் முரண்பாடான ஏற்றுமதி கொள்கைகளால் அமெரிக்காவின் வர்த்தகம் பாதிக்கப்படுவதாக கூறிய அந்த நாட்டின் அதிபர் டிரம்ப் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான வரியை உயர்த்தினார்.

இதற்குப் பதிலடியாக அமெரிக்க பொருள்களுக்கான வரியை சீனாவும் உயர்த்தியது.

இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள வர்த்தக போரால் சர்வதேச பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும் சூழல் நிலவுவதாக உலக வங்கி கவலை தெரிவித்தது.

இந்தியாவுக்கான புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ள சீனாவின் சங் வெய்டோங் இவ்விடயம் குறித்துக் கூறியவை வருமாறு:-

வர்த்தகம் தொடர்பான விடயங்களில் இந்தியாவுடன் சீனா தொடர்ந்து ஆரோக்கியமான உறவை வைத்துக் கொள்ளவே விரும்புகிறது. சமீபகாலமாக இந்தியாவிலிருந்து சீனாவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் அளவு 15 சதவீதம் அதிகரித்துள்ளது.



அமெரிக்காவின் ஒருதலைப்பட்சமான சந்தர்ப்பவாத வர்த்தகக் கொள்கைகளால் சீனா மட்டுமல்லாமல் இந்தியாவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் அமெரிக்காவுக்கு எதிராக சீனா கடுமையாக போராடி வருகிறது. இந்த போராட்டத்தில் இந்தியாவும் இணைய வேண்டும். – இவ்வாறு அவர் கூறினார்.

# பயங்கரவாதத்துக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கிடுக்கிப்பிடி

**வொஷிங்டன்,ஜுலை22**
**தற்போது சர்வதேசப் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டுள்ள ஹபீஸ் சயீத் 2001 இல் இருந்து இப்போதுவரை 7 முறை கைது செய்யப்பட்டுள்ளார். இது வழக்கமான ஒன்று. பாகிஸ்தான், பயங்கரவாதிகளை உண்மையாக தண்டிக்க வேண்டும் என்று அமெரிக்கா கிடுக்கிப்பிடி போட்டுள்ளது.**

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் 2017 ஆம் ஆண்டு ட்ரம்ப் பதவி ஏற்றார். அப்போது முதல் அமெரிக்காவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான உறவு நன்றாக இல்லை. பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரால் தங்களிடம் இருந்து பாகிஸ்தான் நிதி உதவி பெற்றுக்கொண்டு, தங்கள் சொந்த மண்ணில் இயங்கி வருகிற பயங்கரவாத அமைப்புகள் மீது பாரபட்சமற்ற நடவடிக்கை எடுப்பதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கருதுகிறார். நம்புகிறார். அதன் அடிப்படையில், பாகிஸ்தானுக்கு அளித்து வந்த பயங்கரவாத தடுப்பு நிதி உதவியை டிரம்ப் நிறுத்தி வைத்துள்ளார்.

இந்த நிலையில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானை அமெரிக்கா அழைத்துள்ளது. அமெரிக்கா செல்கிற இம்ரான்கான் இன்று (திங்கட்கிழமை) வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி டிரம்பைச் சந்தித்து பேசுகிறார்.

இந்தச் சந்திப்பின்போது, தன் சொந்த மண்ணில் உள்ள பயங்கரவாத அமைப்புகளை ஒடுக்குவது தொடர்பாக அவரிடம் டிரம்ப் கேள்விகள் எழுப்புவார்.

இதையொட்டித்தான், மும்பை தாக்குதல் பயங்கரவாதி ஹபீஸ் சயீத்தை பாகிஸ்தான் கைது செய்துள்ளதாக நம்பப்படுகிறது. இதை நாடகமாகத்தான் இந்தியாவும் பார்க்கிறது.



இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு கிடுக்கிப்பிடி போடுகிற வகையில் வொஷிங்டன் வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரி ஒருவர் கருத்துக்களை வெளியிட்டு பரபரப்பு ஏற்படுத்தி இருக்கிறார். அவர் கூறியவை வருமாறு: –

வொஷிங்டன் வெள்ளை மாளிகைக்கு வருமாறு பாக். பிரதமருக்கு அழைப்பு விடுத்திருப்பதன் மூலம் பாகிஸ்தானுடனான உறவுகளைச் சரி செய்வதற்கான கதவு திறக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதிகள் மற்றும் பயங்கரவாத அமைப்புகள் தொடர்பான தனது கொள்கைளை பாகிஸ்தான் மாற்றிக்கொண்டால், இரு நாடுகள் இடையே ஒரு கூட்டை உருவாக்க முடியும் என்ற செய்தியை அந்த நாட்டுக்கு விடுக்கிறோம்.

பாகிஸ்தானுக்கு அளித்து வந்த பயங்கரவாதத் தடுப்பு நிதி உதவியை 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாங்கள் நிறுத்தி வைத்துள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். தற்போதைக்கு அந்த நிலையில் எந்த மாற்றமும் இல்லை. லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது போன்ற அமைப்புகள் மீது நடவடிக்கை எடுப்பதில் அந்த நாடு கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது எடுக்கப்பட்டுள்ள ஆரம்ப நடவடிக்கையை (மும்பை தாக்குதல் பயங்கரவாதி ஹபீஸ் சயீத் கைது உள்ளிட்ட) வைத்து மட்டும் பாகிஸ்தானை எடை போட்டு விட முடியாது. நாங்கள் நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். பாகிஸ்தான் எடுக்கின்ற நடவடிக்கைகள் உறுதியானவையா, நீடித்து நிற்கக்கக்கூடியவைதானா என்பதை நாங்கள் பொறுத்திருந்து பார்ப்போம்.



பாகிஸ்தானைப் பொறுத்தமட்டில் நாம் இறுதி மதிப்பீடு செய்யவில்லை. இப்போது எடுத்துள்ள நடவடிக்கைகளையெல்லாம் நாங்கள் ஏற்கனவே பார்த்து இருக்கிறோம். நாங்கள் நிலைத்து நிற்கத்தக்க, உறுதியான நடவடிக்கைகளை எதிர்பார்க்கிறோமே தவிர பெயரளவிலான நடவடிக்கையை அல்ல.

2001 ஆம் ஆண்டில் இருந்து ஹபீஸ் சயீத் கைது செய்யப்பட்டிருக்கின்றமை இது 7 ஆவது முறை. அவர் கைது செய்யப்படுவதும், பின்னர் விடுவிக்கப்படுவதும் தான் கடந்த காலத்தில் வழக்கமாக நடந்துள்ளது. நாங்கள் தெளிவான கண்களும், யதார்த்தமும் கொண்டவர்கள். இந்த மக்களை (ஹபீஸ் சயீத் போன்றவர்கள்) உண்மையாக தண்டிப்பதில் பாகிஸ்தான் தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுப்பதை நாங்கள் பார்க்க விரும்புகிறோம்.– இவ்வாறு அவர் கூறினார்.

## பயணிகள் விமானத்தில் அமெ. பறந்தார் பாகிஸ்தான் பிரதமர்!

### இராணுவத் தளபதிகளையும் கூட்டிச் சென்றார்

இஸ்லாமாபாத்,ஜுலை22

அமெரிக்க அதிபரைச் சந்திக்க பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் பயணிகள் விமானத்தில் அமெரிக்கா பறந்தார்.

பாகிஸ்தானில் தற்போதைய பிரதமராகப் பதவி வகிப்பவர் இம்ரான்கான். இவர் 3 நாள் பயணமாக நேற்று முன்தினம் அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். அங்கு அதிபர் டிரம்பை இன்று அவர் சந்திக்க இருக்கிறார்.

பொதுவாக ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு செல்லும் தலைவர்கள் இராணுவ விமானத்திலோ அல்லது தனி விமானத்திலோ பயணம் செய்வது வழக்கம். ஆனால், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானோ பயணிகள் விமானமான 'கட்டார் ஏர்வேஸில்' பயணம் செய்தார். சிக்கன நடவடிக்கையாக, பயணிகள் விமானத்தில் இம்ரான்கான், பயணத்தை மேற்கொண்டு இருக்கிறார்.

அவரது இந்த மூன்று நாள் சுற்றுப் பயணத்தில் அமெரிக்க எம்.பி.க்களையும், 'கார்ப்ரேட்' தலைவர்களையும், அமெரிக்க வாழ் பாகிஸ்தான் மக்களையும் அவர் சந்திக்க இருக்கிறார்.

இந்தப் பயணத்தில், பிரதமர் இம்ரான்கானுடன் பாகிஸ்தான் வெளியுறவுத் துறை மந்திரி ஷா மெக்மூத் குரேஷி, தலைமை ராணுவ தளபதி குவாமர் ஜாவீத் பாஜ்வா மற்றும் ஐ.எஸ்.ஐ. தலைமை இயக்குநர் ஆகியோர் பயணம் செய்தனர். அமெரிக்க அதிபர் டிரம்பும், இம்ரான்கானும் முதல் முறையாக அமெரிக்காவில் சந்தித்து பேசுகிறார்கள். அத்துடன் பாகிஸ்தானின் இரு ராணுவ உயர் அதிகாரிகள், பிரதமருடன் அமெரிக்கா சென்று இருக்கின்றமை இதுவே முதல் முறை ஆகும்.

## பாரசீக வளைகுடாப் பதற்றத்தால் மசகு எண்ணெய் விலை உயரும்?



பாரசீக வளைகுடாவில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருவதால் சர்வதேச அளவில் மசகு எண்ணெய் விலை உயரும் அபாயம் உள்ளது.

அணு ஆயுதப் பரவலைத் தடுக்கும் விதமாக ஈரானுடன் செய்து கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியது. அது முதல் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே தொடர்ந்து மோதல் போக்கு இருந்து வருகிறது.

இந்த நிலையில் பாரசீக வளைகுடாவில் ஹோர்முஸ் ஜலசந்தியில் அமெரிக்க போர்க்கப்பல் மற்றும் அதில் இருந்த இராணுவ வீரர்களை அச்சுறுத்தும் வகையில் பறந்ததாகக் கூறப்படும் ஈரானின் ஆளில்லா விமானத்தை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது. இதனால் பாரசீக வளைகுடா பகுதியில் போர் பதற்றம் நிலவுகிறது.

சர்வதேச அளவில் வளைகுடா நாடுகளில் பெறப்படும் மசகு எண்ணெயை ஏற்றிச் செல்லும் 20 சதவீத கப்பல்கள் பாரசீக வளைகுடா பகுதி வழியாகத்தான் செல்கின்றன.

தற்போது அங்கு பதற்றம் நிலவுவதால் எண்ணெய் கப்பல்களை வர்த்தக நிறுவனங்கள் நிறுத்தி வைத்துள்ளன. இதன் காரணமாக மசகு எண்ணெய் விலை உயரும் அபாயம் உள்ளது

## எகிப்துக்கான விமான சேவைகளை இடைநிறுத்தியது பிரிட்டிஷ் ஏர்வேஸ்

### பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்தவாம்

லண்டன்,ஜுலை22

எகிப்து தலைநகரம் கெய்ரோ செல்லும் விமானங்கள் ஒரு வாரம் ரத்து செய்யப்படுகிறது என பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

உலகின் முன்னணி விமான சேவை நிறுவனமாக திகழ்ந்து வருவது பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனம். அனைத்து நாடுகளுக்கும் விமான சேவைகளை அளித்து வருகிறது.

இந்நிலையில், பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமான நிறுவனம் எகிப்து தலைநகரம் கெய்ரோ செல்லும் அனைத்து விமானங்களும் ஒரு வாரத்துக்கு ரத்துச் செய்யப்படுகின்றன என அறிவித்துள்ளது.




இதுதொடர்பாக விமான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாதுகாப்பு காரணங்களுக்காக விமான சேவைகள் ரத்துச் செய்யப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான சேவையை சீர்குலைக்கும் பயங்கரவாத அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எகிப்தில் இருந்து பிரிட்டன் செல்லும் விமானங்களுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பிரிட்டன் வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

## இத்தாலியில் எரிமலை திடீர் வெடிப்பு 2 விமான நிலையங்கள் மூடப்பட்டன

ரோம்,ஜுலை 22

இத்தாலியில் எரிமலை வெடித்ததால் இரு விமான நிலையங்கள் மூடப்பட்டன.



இத்தாலியின் சிசிலி பகுதியில் உள்ள எத்னா எரிமலை ஐரோப்பாவில் மிகப் பெரியது. அது வெள்ளி இரவு திடீரென வெடித்தது. இதனால் 1.5 கி.மீ. தொலைவுக்கு எரிமலைக்குழம்பு பரவி உள்ளது. மேலும் சாம்பலும், கரும்புகையும் பரவி வருவதால் அருகில் உள்ள இரு விமான நிலையங்கள் மூடப்பட்டு உள்ளன.

இந்தச் சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் இல்லை. எனினும் எரிமலைக்கு அருகில் வசித்து வரும் மக்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு உள்ளனர். அங்கு பேரிடர் மீட்புக் குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு உள்ளனர்.



காலைக்கதிர் Kalaikathir



# மன அழுத்தமா?

## குறைக்க வழிகள் உண்டு; கவலை வேண்டாம்!



"ஒரு நாளைக்கு 20 நிமிடங்களை உங்களால் ஒதுக்க முடியுமா? அந்த 20 நிமிடங்களுக்கு சில பயிற்சிகளைச் செய்தால் போதும்... சில வாரங்களிலேயே மனஅழுத்தம் கட்டுக்குள் வந்துவிடும். அதோடு, அதைத் தூண்டும் ஹோர்மோன்களின் எண்ணிக்கையும் படிப்படியாகக் குறைந்துவிடும்" என்கிறார்கள் மனநல மருத்துவர்கள்.

அந்த அளவுக்கு மனஅழுத்தத்தின் தாக்கம் மூலை, முடுக்குகளில் இருப்பவர்களைக்கூட விடாமல் இறுகப் பற்றிக்கொண்டிருக்கிறது. 'என்னை ஏம்மா இப்பிடி காலையிலேயே டென்ஷன் பண்றே?' என்று சின்னஞ்சிறு குழந்தை கூடக் கேட்கிறது. இதன் தாக்கம் அதிகமானதற்குக் காரணம், இன்றைய வாழ்க்கை முறை. ஆனால், சின்னச் சின்ன பயிற்சிகள், சில முறையான பழக்கங்களைக் கடைப்பிடித்தால் எப்பேர்ப்பட்ட மனஅழுத்தத்தையும் தகர்த்து எறிந்துவிடலாம். அப்படி மனஅழுத்தம் விரட்டும் 8 எளிய வழிமுறைகளைப் பார்ப்போம்.

அதற்கு முன்னால் ஒரு விடயம்..! மன அழுத்தம் நம்மை என்ன செய்யும்? என்ன வேண்டுமானாலும் செய்யும். தூக்கமின்மையில் தொடங்கி, உயர் ரத்த அழுத்தம், உடல்பருமன் என ஒவ்வொன்றாக பல பிரச்சினைகளை அள்ளி அள்ளிக் கொடுத்து, இதய நோய்கள் வரை கொண்டு வந்து நிறுத்திவிடும். இது உடல் ரீதியான பிரச்சினை என்றால், மனம் நொறுங்கிப்போய் மனநல பாதிப்புகள் ஏற்பட்டு உயிர் துறக்கக்கூட காரணமாகிவிடும்.

தீவிர மனஅழுத்தப் பிரச்சினைக்கு சிகிச்சையைத் தவிர வேறு வழி இல்லை. எனவே, அவ்வப்போது, இந்தப் பிரச்சினையை அடையாளம் கண்டுகொண்டு அதிலிருந்து மீண்டு வர முயற்சிக்க வேண்டும். அப்படித்தான் இதிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அதற்கு நம் சிந்தனையை வேறு பக்கம் திசை திருப்ப வேண்டும். அப்படி சிந்தனை திசை திரும்பும் நேரத்தில் நாம் செய்கிற பயிற்சிகள் நமக்குப் பிடித்ததாக, நம் கவலைகளை மறக்கச் செய்வதாக இருக்க வேண்டும்.

### முதன்மையானது மூச்சுப்பயிற்சி!

பதற்றத்தோடும் பரபரப்பாகவும் இருக்கும் நேரத்தில் நாம் எப்படி மூச்சுவிடுவோம்... கவனித்திருக்கிறீர்களா? மேலோட்டமாக விடுவோம் அல்லது மூச்சை இழுத்து நிறுத்துவோம். இப்படி மூச்சை ஆழமாகவிடாமல் இருப்பது உடலுக்குப் பல பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். இதற்கான மூச்சுப்பயிற்சியை எப்படிச் செய்வது? அதிகாலையில் மூச்சுப்பயிற்சி செய்வது சிறந்தது. நேராக நிமிர்ந்து உட்கார்ந்து, கண்களை மூடிக்கொள்ளவும். கைகளை அடிவயிற்றில்படும்படி வைத்துக்கொண்டு, ஆழமாக மூச்சை இழுத்து, மெதுவாக வெளியேவிடவும். இப்படிச் செய்யும்போது அடிவயிற்றின் அசைவுகளை உணர முடியும். இதனால், கவனம் முழுவதும் அதில் குவிக்கப்பட்டு, உடலும்



மனமும் தளர்வடைந்து இயல்புநிலையை அடையும். மேலும், இதய துடிப்பு சீராக இருப்பதால், ரத்த அழுத்தம் குறையும்; மனஅழுத்தம் நீங்கும். இந்தப் பயிற்சியை 5 இல் இருந்து 10 நிமிடங்களுக்குச் செய்யலாம்.

### இந்த பூமியோடு தொடர்பில் இருங்கள்!

வீட்டில் இருந்து விலகி சற்று தூரம் எந்தச் சிந்தனையும் இல்லாமல் நடந்து செல்வதும் ஒரு பயிற்சியே. செருப்பு வேண்டாம். வெறும் கால்களால் நடந்து தெருவுக்கு வாருங்கள். சற்று தூரம் மெள்ள நடந்து செல்லுங்கள். காலை, மாலை வேளையில் வீசும் இதமான காற்று உங்கள் முகத்தில் மென்மையாகப் படட்டும். உங்கள் பாதங்கள் தரையில் படும் போது, 'இந்த பூமியில் இருக்கிறோம், பூமியோடு தொடர்பில் இருக்கிறோம், நெருக்கமாக இருக்கிறோம்' என பூமி என்கிற கிரகத்தின் உச்சியில் நிற்பதாக, நடப்பதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். ஐந்து நிமிட நடை போதும்; இதை உணர்ந்து செய்யுங்கள். உங்களிடம் உள்ள பதற்றம் படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கும்.

### புன்னகை மருந்து!

இது ஓர் எளிய அறிவியல்! மனஅழுத்தத்தில் இருக்கிறீர்களா? மனஅழுத்தத்துக்குக் காரணமாகும் கோர்ட்டிசோல் (cortisol) ஹோர்மோன் உங்கள் உடலில் அதிகமாகச் சுரக்கும். வயிறு குலுங்கச் சிரிக்கிறீர்களா? கோர்ட்டிசோல் சுரப்பு குறைந்து, மூளையைத் தூண்டுவதற்கு உதவும் எண்டார்பின் ஹோர்மோன் சுரப்பு அதிகமாகும். எனவே, புன்னகை மிகச் சிறந்த மருந்து என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். இதற்காக நகைச்சுவை சினிமாக்கள், வீடியோக்களைப் பார்க்கலாம்; உங்களுக்கு வயிறு வலிக்கும் அளவுக்கு சிரிப்பு மூட்டுபவர்களுடன் உரையாடலாம். மொத்தத்தில் நீங்கள் சிரிக்க வேண்டும். அவ்வளவுதான். சிரித்து சிரித்தே மன உளைச்சலை அகற்றிவிட முடியும்.

### சமூக வலைதளங்கள் சகஜநிலைக்குக் கொண்டுவரும்!

சமூக வலைதளங்கள் மீது ஒருபக்கம் மோசமான பிம்பம் கட்டமைக்கப்பட்டு வருகிறது. ஆனால், சமூக வலைதளங்களும் மன அழுத்தத்தைக் குறைக்க உதவும் மிகச்சிறந்த ஒன்று என்பதை நினைவில்கொள்ளுங்கள். ஃபேஸ்புக், வாட்ஸ்அப் போன்றவற்றில் உங்களுக்குப் பிடித்தவர்களுடன் உரையாடுங்கள்.

இசை, நகைச்சுவை செய்திகள், மீம்ஸ், தத்துவங்கள்... என நீங்கள் ரசித்ததை நெருக்கமானவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்கு வரும் அத்தனை ஸ்டேட்டஸ்களுக்கும் குறைந்த பட்சம் ஒரு லைக்காவது போடுவது என பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். இணைய வசதி இல்லாதவர்களுடன் தொலைபேசியிலாவது பேசலாம். மன இறுக்கம் மெள்ள மெள்ள அகல ஆரம்பிக்கும்.

### இசை... இனிமையான வரம்!

'இசையால் வசமாக இதயம் எது?' வெறும் பாடல் வரி அல்ல; மனதுக்கு உதவக்கூடிய மருத்துவ உண்மை. நாம் ரசித்துக் கேட்கும் மெல்லிய இசை, ரத்த அழுத்தத்தைக் குறைக்கும்; இதயத் துடிப்பைச் சீராக்கும்; பதற்றம், கவலைகளைக் குறைக்கும். இதை பல ஆய்வு முடிவுகளே சொல்லியிருக்கின்றன. எப்பேர்ப்பட்ட பதற்றத்தையும் தணித்து, மனதை அமைதிப்படுத்தும் சக்தி இசைக்கு உண்டு. நீங்கள் சாதாரண பாத்ரூம் சிங்கராகக்கூட இருக்கலாம். வீட்டுக்குள்ளேயே அறைக்குள் உங்களுக்குப் பிடித்த பாடல்களைப் பாடிப் பார்க்கலாம். மனம் இலேசாகும்.

### சொக்லேட் நல்லது!

அளவாக இனிப்பு சாப்பிடுவது மனதுக்கு இதம் தரும். 'இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை டார்க் சொக்லேட் (1.4 அவுன்ஸ்) சாப்பிடுவது, மன அழுத்தத்தைத் தூண்டும் ஹோர்மோன்களைக் குறைக்க உதவும்' என்கிறது ஓர் ஆய்வு. சொக்லேட்டைச் சாப்பிடும்போது வேறு எதைப் பற்றியும் சிந்திக்காதீர்கள்; அதன் ருசியை, இனிமையை அனுபவித்து ருசியுங்கள். இதுகூட ஒரு மனப்பயிற்சி தான். மன ஆரோக்கியம் காக்க சொக்லேட்டும் உதவும்.

### கிரீன் டீ தி கிரேட்!

கிரீன் டீயில் உள்ள அமினோ அமிலம், தியானின் (Thianine) ஆகியவை மூளையை அமைதிப்படுத்தும் வல்லமை கொண்டவை;

## நல்லவற்றைச் சிந்திப்போம்; நன்மைகள் பெருகிடும்!!

கிரீன் டீ அதிகம் குடித்தாலும் பல்வேறு பிரச்சினைகள் உருவாகலாம். எனவே, ஒரு நாளைக்கு நான்கு கப்புக்கு மிகாமல் பார்த்து கொள்வது நல்லது. இப்படி ஆறு வாரங்களுக்குத் தொடர்ந்து கிரீன் டீ குடித்தால், அது மனஅழுத்தத்துக் குக் காரணமாகும் கோர்ட் டிசோல் ஹோர்மோன் சுரப்பை குறைக்கும் என்கிறது ஓர் ஆய்வு.

### மந்திர வாசகம் முக்கியம்!

நம்மை நாமே உற்சாகப்படுத்திக்கொள்ள உதவும் சில பாசிட்டிவ் வாசகங்களை உங்களுக்கு நீங்களே உருவாக்கிக்கொள்ளுங்கள். அல்லது உங்களுக்குப் பிடித்த சிறந்த மேற்கோள்களை எழுதிவைத்துக் கொள்ளுங்கள். அதை உங்களுக்குள்ளேயே அடிக்கடி சொல்லிப் பாருங்கள். உதாரணமாக, 'என்னால் முடியும்', 'நடப்பதெல்லாம் நன்மைக்கே' போன்ற எப்படிப்பட்ட வாசகமாகவும் அது இருக்கலாம். இந்த வாசகங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லும்போது, மனதுக்கு சக்திதரும் மந்திரங்களாக அவை மாறும். விரைவில் நல்ல மாற்றம் தெரியும். ★

நாளை மன அழுத்தம் தணிப்பு தினமாகும்.

# சின்மயா மிஷனின் நல்லூர் உற்சவகால 7 ஆம் வருட பஜனை

யாழ் சின்மயா மிஷன் நல்லூர் கந்தப்பெருமான் மகோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயல்திட்டத்தின் ஓர் அம்சமாகிய பஜனை நிகழ்வு 7வது வருடமாக இவ்வருடமும் வழமை போன்று நடைபெறும்.

கொடியேற்றமாகிய 1ம் திருவிழாவிலிருந்து (06/08/2019) கொடியிறக்கமாகிய 25 ஆம் திருவிழாவரை (30/08/2019) வரை காலையில் பாடசாலை மாணவர்களும், மாலையில் அறநெறிப்பாடசாலை மாணவர்களும் திருமுறை, திருப்புகழ், பஜனைப் பாடல்களை பாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தெய்வீகப்பணியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள், அறநெறிப்பாடசாலைகள் இம்மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக யாழ் சின்மயா மிஷன் அலுவலகத்துடன் (தினமும் மாலை 4மணி தொடக்கம் 6மணி வரை) நேரடியாகவோ, தொலைபேசியூடாகவோ (021 2223447, 077 8573447) தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு சின்மயா மிஷன் கேட்டுக் கொள்கின்றது.

# ரியூனியன் தீவை நோக்கிச் செல்கிறது இலங்கை குடியேற்றவாசிகளின் படகு?



கொழும்பு, ஜூலை 22

இலங்கையில் இருந்து சட்டவிரோத குடியேற்றவாசிகள் என சந்தேகிக்கப்படுபவர்களை ஏற்றிக்கொண்டு படகு ஒன்று வந்து கொண்டிருப்பதாக ரியூனியன் தீவு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

ரியூனியன் தீவு ஊடகச் செய்திகள் இதனைத் தெரிவித்துள்ளன.

இலங்கையில் இருந்து ஜூலை 12ஆம் திகதி படகு ஒன்று புறப்பட்டுச் சென்றுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது என்றும் அது, ரியூனியன் தீவை நோக்கிச் செல்லக் கூடும் என்றும், இலங்கை அதிகாரிகளால் எச்சரிக்கைத் தகவல் அளிக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் படகை தாம் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை என்றும், அந்தப் படகு ரியூனியன்தீவை நோக்கியே பயணிக்கிறது என்பதும் உறுதி செய்யப்படவில்லை என்றும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

## தமிழ்–முஸ்லிம் விரிசலுக்கு காரணம் கூறுகிறார் விக்கி!

மட்டக்களப்பு, ஜூலை 22

முஸ்லிம்கள் தம்மைத் தமிழர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட முற்பட்டதாலேயே தமிழ், முஸ்லிம் மக்கள் பிரியும் நிலை ஏற்பட்டதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு – களுவாஞ்சிகுடி கண்ணகிபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒருகாலத்தில்சகோதரத்துவம் நிலவி வந்தது. ஆனால் இன்று சந்தேக நிலைமையே இரு சமூகங்கள் மத்தியிலும் நிலவி வருகின்றது. அதனை அரசும் சரியான முறையில் பயன்படுத்தி சில காரியங்களை செய்துகொண்டதால் முஸ்லிம்களே செய்தார்கள் எனத் தமிழர்கள் சிந்திக்கவும் தமிழர்களே செய்தனர் என முஸ்லிம்கள் சிந்திக்கவும் ஏற்ற வகையில் தமது இராணுவத்தைப் பயன்படுத்தி அரசு தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

இதன் காரணமாக தமிழ்,முஸ்லிம் உறவில் பெரிய விரிசல் ஏற்பட்டது. தற்போதைய நிலையில் ஏப்ரல் 21 தாக்குதல்களுக்குப் பின்னர் முஸ்லிம் மக்களை நம்ப முடியாது என முழு இலங்கையிலும் அவர்களுக்கு எதிரான சிந்தனைகள் முன்வைக்கப்படுகின்றன– என்றார். (ஐ)

# மலையக அபிவிருத்திக்கு தடையாக இருப்பது எது?

## வேலுகுமார் எம்.பி. விளக்கம்

கொழும்பு, ஜூலை 22

கிடப்பில் போடப்பட்டிருந்த பெருந்தோட்டப்பகுதி பாடசாலைகளுக்கு காணி உரிமம் வழங்கும் செயற்றிட்டத்துக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரான அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணனே புத்துயிர் கொடுத்தார்.எனினும், இவ்விடயத்திலும் பெயர்போட்டுக்கொள்ளும் அரசியலை இன்று சிலர் வெற்றிகரமாக முன்னெடுத்துவருகின்றனர். இத்தகைய அரசியல் அணுகுமுறையே மலையக அபிவிருத்திக்கு பெரும் சாபக்கேடாக அமைந்துள்ளது.

–இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியிலுள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிலருடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் வேலுகுமார் எம்.பி., மேலும் கூறியதாவது,

மலையகத்தில் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதும் எமது பிரதான இலக்காகும். இதன் காரணமாகவே அபிவிருத்திகளுக்கும், உரிமை அரசியலுக்கும் அதிக முக்கியத்தும் வழங்கிவருகின்றோம்.

எனவே, பெருந்தோட்டப்பகுதிகளில் யார் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தாலும் அதற்கு முழு ஆதரவையும் வழங்குவோம். யார் குத்தினால் என்ன அரிசி வந்தால் சரி என்பதுபோல், யார் செய்தால் என்ன – மக்களுக்கு சேவைகள் சென்றடைவதே பிரதான விடயமாகும்.

ஆனாலும் ஒருவரால் முன்னெடுக்கப்பட்ட திட்டத்தை அவரை முழுமையாக ஓரங்கட்டிவிட்டு அதற்கு மற்றுமொருவர் பெயர்போட முயற்சிக்கின்றமை அநாகரிக அரசியலின் உச்சகட்டமாகும். சமூகமாற்றத்தை நோக்கி நாம் பயணிக்கையில் இத்தகைய அரசியல் கலாசாரமும் மாற்றமடையவேண்டும்.

நான் என்ற மமதையானது அழிவையே தரும் என்கிறது வேதம். எனவே, வாழ்க்கையிலும், அரசியல் பயணத்திலும் நான்தான் என்ற மமதை தலைக்கேறிவிட்டால் அடுத்து என்னவென்பதை நான் கூறித்தான் புரியவேண்டும் என்றில்லை.

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு இரண்டுஏக்கர்வீதம்காணி வழங்கும் திட்டம் இன்று நேற்று அல்ல 92 காலப்பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. எனினும், மலையகத்துக்கான உரிய அரசியல் தலைமைத்துவம் இல்லாதிருந்ததால் அத்திட்டம் தொடர்ச்சியாக இழுத்தடிக்கப்பட்டு அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

இந்நிலையில் கல்வி இராஜாங்க அமைச்சராக செயற்பட்ட காலத்தில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எங்கள் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான ராதாகிருஷ்ணனே அத்திட்டத்துக்கு மீண்டும் புத்துயிர் கொடுத்தார். கல்வி அமைச்சின் ஊடாக அமைச்சரவைப் பத்திரங்களை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுத்திருந்தார். இதற்காக அவருக்கு நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம்.

இதன் பலனாகவே இன்று பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு காணி உரிமம் கிடைக்கவுள்ளது. இதற்கு தாங்கள் தான் நடவடிக்கை முன்னெடுத்தோம் என சிலர் உரிமை கொண்டாடி வருகின்றனர். ஆனால், அடித்தளமிட்டவரை மறந்துவிட்டனர்.



இப்படியான அரசியல் அணுகுமுறையாலேயே மலையகத்தில் பல அபிவிருத்தி திட்டங்கள் முடங்கியுள்ளன. நாம் நாகரிக அரசியலையே விரும்புகின்றோம். போட்டியிருக்கவேண்டும். அதிலும் நேர்வழியில் வெற்றிபெறவேண்டும். குறுக்கு வழியில்– மக்களை ஏமாற்றி முன்னேற நினைப்பது கூட துரோகமாகவே கருதப்படும்." என்றார் வேலுகுமார் எம்.பி. (ஐ)

# இலங்கை-பிரிட்டன் படைகளின் 'ஒப்பரேசன் ஈட்டி' ஒக்ரோபரில்!

கொழும்பு, ஜூலை 22

இலங்கை- பிரிட்டன் படை கள் இணைந்து, வரும் இந்த ஆண்டு பிற்பகுதியில், ஒப்பரேசன் ஈட்டி (Operation Spear) என்ற பெயரில் கூட்டு இராணுவ ஒத்திகைகளை மேற்கொள்ளவுள்ளன.

ஒக்ரோபர் 27 ஆம் திகதி தொடக்கம், நவம்பர் 04ஆம் திகதி வரை இந்தக் கூட்டுப் பயிற்சி, 9 நாள்கள் நடைபெறவுள்ளன.

ஏதேனும் தீவிரவாதத்துடன் தொடர்புடைய சம்பவங்கள் நிகழ்ந்தால், தமது நாட்டவர்களை வெளியேற்றுவதை அடிப்படையாகக் கொண்டு பிரிட்டன் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கிறது.

இலங்கைப் படையினர் மனிதாபிமான உதவிகள், இடர் மீட்பு, மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை கற்றுக்கொள்வதற்கு இந்தப் பயிற்சியைப் பயன்படுத்திக் கொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டுப் பயிற்சி, தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர் என்ற தொனிப் பொருளில் இடம்பெறவுள்ளது,

இந்தக் கூட்டுப் பயிற்சிக்காக இலங்கையின் விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் மருத்துவமனைகள் பயன்படுத்தப்படவுள்ளன.

ஏனைய மோதல் பகுதிகளில் பிரிட்டன் படைகள் பெற்றுக் கொண்ட உளவு மற்றும் காயமுற்றோரை மீட்பது தொடர்பான அனுபவங்களை இதன்போது வெளிப்படுத்துவார்கள்.

விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவத்தினர் எப்படித் தோற்கடித்தனர் என்பதை பிரிட்டன் படையினர் அறிந்து கொள்வதற்கு இந்தக் கூட்டுப் பயிற்சி உதவும் என இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரம் ஒன்று தெரி வித்துள்ளது.



இந்தக் கூட்டுப்பயிற்சியை பிரிட்டன் வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியகமும், இலங்கை அரசும் இணைந்தே ஏற்பாடு செய்துள்ளன. (ஐ)




# ஓய்வு பெற்றார் டோனி?



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் எம்.எஸ்.டோனி தனது நிரந்தர ஓய்வு குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

ஆனால் மேற்கிந்திய தீவுகளுக்கான இந்திய அணியின் சுற்றுப் பயணத்திலிருந்து அவர் விலகியுள்ளார்.

இதேவேளை, இந்தியாவின் பராசூட் படைப்பிரிவில் கௌரவ அதிகாரியாக உள்ள டோனி அந்த படைப்பிரிவுக்காக பணியாற்றுவதற்காக இரண்டு மாத கால விடுமுறையை கோரியுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

டோனி தற்போதைக்கு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப்போவதில்லை எனவும், ஆனால் அவர் இரண்டு மாத விடுமுறையை கோரியுள்ளார் எனவும் தெரிவித்துள்ள அதிகாரி, அவரது இந்த முடிவை விராட் கோஹ்லிக்கும் தெரிவுக் குழுவின் தலைவருக்கும் தெரியப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தற்போதைக்கு ஓய்வு பெறுவதில்லை என்ற டோனியின் முடிவு காரணமாக அவரது எதிர்காலம் குறித்து தெரிவுக் குழுவினரே தீர்மானிக்கக்கூடிய நிலை யேற்பட்டுள்ளது என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# உலக சாதனையை புதுப்பித்தார் தர்ஜினி

உலகக்கிண்ண வலைப்பந்தாட்டத்தொடரில் அதிக கோல்களை போட்ட வீராங்கனையாக இலங்கையின் தர்ஜினி சிவலிங்கம் மீண்டும் உலக சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்தின் லிவர்பூலில் நடைபெறும் உலகக்கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரில் 15 மற்றும் 16 ஆம் இடங்களை தீர்மானிக்கும் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இலங்கை அணியும் சிங்கப்பூர் அணியும் மோதின. போட்டியில் இலங்கை அணி 78 -57 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற லீக் போட்டியொன்றிலும் இலங்கை அணி சிங்கப்பூரை 88 - 50 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியிருந்தது. கடந்த வெள்ளி போட்டியில் நட்சத்திர வீராங்கனையான தர்ஜினி சிவலிங்கம் 77 கோல்களைப் போட்டார்.



இதன் மூலம் கடந்த திங்கட்கிழமை சிங்கப்பூர் அணிக்கு எதிராக 76 கோல்களைப் போட்டு தானே படைத்த உலக சாதனையை தர்ஜினி சிவலிங்கம் புதுப்பித்துள்ளார்.

இது உலகக்கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரொன்றில் வீராங்கனையொருவர் பதிவு செய்யும் அதிகூடிய கோல்களாகும்.

தர்ஜினி சிவலிங்கம் இவ்வருட உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரில் இதுவரையில் 271 கோல்களைப் போட்டு, தொடரில் அதிகூடிய கோல்களைப் போட்ட வீராங்கனையாகவும் பதிவாகியுள்ளார்.

இதேவேளை, இந்தப் போட்டியுடன் தர்ஜினி சிவலிங்கம் சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கெட் போட்டிகளில் இனி புதிய விதிமுறைகள்!

கிரிக்கெட் போட்டிகளில் புதிய விதிமுறைகளை அறிமுகம் செய்வதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. லண்டனில் நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தின் போதே இது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதற்கமைய ஐ.சி.சியின் புதிய விதிமுறைகளுக்கு அமைவாக இனிவரும் காலங்களில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் மற்றும் முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் வீரரொருவர் தலை உபாதை ஒன்றை எதிர்கொள்ளும் போது அவருக்கு பதிலாக பிரதியீட்டு வீரர் ஒருவரை அணியொன்று குறித்த போட்டியில் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் குறித்த கிரிக்கெட் போட்டி ஒன்றில் தலை உபாதைக்காக பிரதியீடு செய்யப்படும் வீரர் ஒருவர் களத்தடுப்பில் மட்டுமல்லாது துடுப்பாட்டம், பந்துவீச்சு ஆகிய இரண்டிலும் ஈடுபட முடியும்.

ஐ.சி.சியின் இந்த புதிய விதிமுறை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. எனினும், ஐ.சி.சி. போட்டி ஒன்றில் வீரர் ஒருவரை முழுமையாக பிரதியீடு செய்ய குறித்த அணியின் மருத்துவ அதிகாரி விடுக்கும் வேண்டுகோளினை போட்டி மத்தியஸ்தர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஐ.சி.சியின் கிரிக்கெட் குழு வழங்கிய அறிவுரை ஒன்றுக்கு அமைய, சர்வதேசப் போட்டிகளில் ஓவர்கள் தாமதமாக வீசிய குற்றச்சாட்டுக்களுக்காக அணித்தலைவர்களுக்கு போட்டித்தடை வழங்கும் நடைமுறை இனி இல்லாமல் செய்யப்பட்டிருக்கின்றது. இந்நிலையில், போட்டி ஒன்றில் தாமதமாக ஓவர்கள் வீசப்படும் சந்தர்ப்பத்தில் அணித்தலைவருக்கும், ஏனைய அணி வீரர்களுக்கும் சம அளவிலான அபராதம் விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐ.சி.சியின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்கும் அணியொன்று வழங்கப்பட்ட நேரத்திற்குள் வீசத்தவறும் ஒவ்வொரு ஓவருக்கும், தொடருக்காக வழங்கப்படும் இரண்டு புள்ளிகளை இழக்க வேண்டி ஏற்படும் என கூறப்பட்டுள்ளது.

மேலும் சர்வதேச கிரிக்கெட் பேரவை, இனிவரும் காலங்களில் ஐ.சி.சி. நடத்தும் போட்டிகளில் வீர, வீராங்கனைகளுக்கு உயர்தரமான மருத்துவ சேவைகளை வழங்குவதனையும் உறுதி செய்துள்ளது.

# இலங்கையிலிருந்து வெளியேறும் மலிங்க?



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க அவுஸ்திரேலியாவின் நிரந்தர வதிவிடத்தைப் பெற்றுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியின் பின்னர் மலிங்க ஓய்வை அறிவிக்கவுள்ளார் என தகவல் வெளிவந்துள்ளது.

இதனால் ஓய்விற்குப் பின்னர் அவர் தனது குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவில் குடியேறவுள்ளார் என அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர் என பங்களாதேஷின் கிரிக்கெட் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவில் அவர் ஏதாவது பயிற்றுவிப்பாளர் பொறுப்பை ஏற்கக்கூடும் எனவும் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

லசித் மலிங்க தற்போது அவுஸ்திரேலியா பயணம் செய்துள்ள நிலையிலேயே இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

# இலங்கை வந்தது பங்களாதேஷ் அணி!

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடர் எதிர் வரும் 26ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் போட்டியில் பங்கேற்கவுள்ள பங்களாதேஷ் அணி கடந்த சனிக்கிழமை மாலை நாட்டை வந்தடைந்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் இலங்கைக்கு முதல் தடவையாக பங்களாதேஷ் அணி வருகை தந்துள்ளது.

இதேவேளை, பங்களாதேஷ் அணியின் தலைவர் மஷ்ரபீ மோர்டஷா தொடை தசைப் பிடிப்பு உபாதை காரணமாக இலங்கை அணிக்கு எதிராக ஆரம்பமாகவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.





## கோரிக்கைகள்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரவூக் ஹக்கீம் தெரிவித்தார்.

சமகாலப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உயர்மட்டம் நேற்று கூடியது. இதன்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவூக் ஹக்கீம் குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதல்களையடுத்து முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் தாக்குதல்களை அடுத்துக் கைது செய்யப்பட்ட அப்பாவிகளை விடுவிக்குமாறும் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அரசு இன்னும் நிறைவேற்றவில்லை என்று இந்தக் கூட்டத்தின்போது சுட்டிக் காட்டப்பட்டது.

அதனால் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்குத் தீர்வை வழங்கும் வரை அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதில்லை என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூக் ஹக்கீம் தெரிவித்தார். (ஜ)

## முதுகெலும்பற்ற...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு முஸ்லிம் மக்கள் பொறுப்புக் கூறத் தேவையில்லை.அது அரசின் பொறுப்பற்ற தன்மையால் நடந்தது. உலக நாடுகளின் இருப்புக்காக அவர்களின் சதிகளில் எமது நாடு சிக்கிக் கொண்டது.

புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும் அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆதாரங்கள் இருந்தும் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய முடியாமற்போனது. முதுகெலும்பில்லாத தலைவர்கள் இருப்பதே இதற்குக் காரணம் .

வழிதவறிய இளைஞர்களைப் பிடித்துக் கொண்டு சர்வதேச நாடுகள் சில தமது நோக்கை அடையச்செய்ததின்விளைவே தாக்குதல். வெளிநாட்டுச் சக்திகள் இங்கு தலைதூக்க இடமளிக்க முடியாது. நாட்டின் புலனாய்வுத் துறையை அந்தச் சக்திகளின் சொல் கேட்டே அரசு முடக்கியது - என்றார்.

உயிர்த்தஞாயிறுதற்கொலைத் தாக்குதல்களில் பெரிதும் பாதிக்கப்பட்ட நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயத்தில் கடந்த 3 மாதங்களின் பின்னர் நேற்று மீண்டும் திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு மக்களின் வழிபாட்டுக்காக ஆலயம் திறக்கப்பட்டது.

கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையினால் நேற்றுக் காலை 8 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆலயம் மக்களின் வழிபாட்டுக்காக மீண்டும் திறக்கப்பட்டது. இதன்போது குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் கலந்துகொண்டனர். (ஜ)

## சூட்டுக் கொல்லப்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏனர். கொல்லப்பட்ட இளைஞனின் சடலத்தைப் பார்வையிடுவதற்காக நேற்றுக் காலை அவர்கள் நால்வரும் வேறு சிலருடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்கள்நால்வரும்கொல்லப்பட்டவருடன் அலைபேசி ஊடாக இறுதியாகத் தொடர்பு வைத்திருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-07)

## கேப்பாப்பிலவுக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புலவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

அங்கு, காணி விடுவிப்பைக் கோரித் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், கேப்பாப்புலவு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை தொடர்பாக இந்தக் குழுவினரால் கேட்டறியப்பட்டது.

கலந்துரையாடலையடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மக்கள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் எம்மைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் போராட்டத்தின் நியாயப்பாடு, போராட்டத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள் எம்மிடம் கேட்டறிந்தனர்.

எமது பிரச்சினைக்கு அவர்களால் உடனடியாகத் தீர்வு சொல்ல முடியாத நிலையிலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும், அமைப்புக்களுடனும் கலந்துரையாடி எமக்குரிய தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு தாம் உறுதுணையாக இருப்போம் எனக் கூறினர் - என்றனர். (ஜ)

## இளைஞனின்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூறினர்.

மானிப்பாய் - இணுவில் வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொக்குவில், கச்சாயைச் சேர்ந்த செல்வரத்தினம் கவிகஜன் (வயது -23) என்ற இளைஞன் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.40 மணியளவில் இடம்பெற்றது.

மானிப்பாயில் உள்ள வீடொன்றைத் தாக்குவதற்கு ஆவா குழுவைச் சேர்ந்தோர் வருகின்றனர் என முன்னதாகவே கிடைத்த தகவலின் அடிப்படையில் ரோந்து நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். அப்போது 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட கும்பலைச் சேர்ந்தோர் தப்பிக்க முற்பட்டபோது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் நேற்று அதிகாலை 3 மணியளவில் சம்பவ இடத்தில் விசாரணைகளை முன்னெடுத்த நீதிவான், கொல்லப்பட்ட இளைஞனின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தவிட்டார்.

இளைஞனின் சடலம் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதற்கு முன்னதாக இடம்பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையில் இளைஞனின் முதுகுப் பக்கமாகப் பாய்ந்த துப்பாக்கி ரவை, முதுகெலும்பில் பட்டுத் திரும்பமடைந்து இதயத்தைத் தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-07)

## முற்றாக...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று 3 மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், மீண்டும் இவ்வாறானதொரு அச்சம் ஏற்படாமலிருப்பதற்கான சரியான வழிமுறை உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவது அனைவரினதும் பிரார்த்தனையாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஜ)

# சிங்கள இளையோர் கைகளிலேயே நாடு!

## ஞானசார தேரர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 22

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை நாட்டில் இருந்து முழுமையாக துடைத்தெறிய வேண்டுமாயின் பௌத்த பிக்குகளும் சிங்கள இளையோரும் ஒற்றுமையாக முன்வரவேண்டும் என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடே அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கலென்பிந்துனுவெவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற பொதுபல சேனா அமைப்பின் மக்கள் சந்திப்பில் கலந்துக கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பௌத்த நாட்டின் மரபுரிமைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றது. அரசியல்வாதிகள் அனைவரும் ஆட்சியில் இருக்கும் காலத்தில் எவ்வளவு நிதி சேமித்துக் கொள்ளலாம் என்று மாத்திரமே நினைக்கின்றார்களே தவிர, நாடு தொடர்பில் எவ்வித அக்கறையும் கொள்வது கிடையாது.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு பௌத்த மத பிக்குகளினால் மாத்திரமே தீர்வு வழங்க முடியும். அரசியல்வாதிகள் தயவுசெய்து விலகிக்கொள்ள வேண்டும்.

பௌத்த பிக்குகள் அரசியல் பேதங்களை துறந்து பௌத்த சாசனத்திற்கு அமைய ஒன்றுப்பட்டு செயற்பட வேண்டும்.

அத்துடன் பௌத்த மதத்தின் மரபுரிமைகளும், கோட்பாடுகளும் பாதுகாப்பப்பட வேண்டுமாயின் சிங்கள இளம் தலைமுறையினர் அனைவரும் பௌத்த மதத்தினை முழுமையாக முறையாக பின்பற்ற வேண்டும். சிங்கள இளைஞர்களின் கைகளிலே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது - என்றார். (ஜ)

## சிவசக்தி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விட்டார் என நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு நேற்றுப் பதில் அளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 3 வருடங்களாக இப்போது விமர்சிக்கின்ற இதே கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது கம்பெரலிய மூலம் செய்யத் தொடங்கியதும் இது ஒரு லஞ்சம் எனக் கூறுகிறார்கள். ஆனால் இது ஒரு லஞ்சமோ என்னவோ எனக்கு அதைப் பற்றி கவலையில்லை. இதை நிச்சயமாக மக்கள் வரவேற்கிறார்கள்.

30 வருட யுத்தத்தில் பாதிப்படைந்த தமது பகுதிகள் கொஞ்சமாவது அபிவிருத்தி அடைய வேண்டும் என மக்கள் இதனை வரவேற்கிறார்கள். சில இடங்களில் 50, 60 வருடங்களாக செப்பனிடப்படாத வீதிகள் எல்லாம் இதன் மூலம் செப்பனிடப்படுகின்றது. இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் செல்வாக்கு ஏற்பட்டுவிடும் என கருதுகிறார்கள். இதனால் இதில் குறை கூறுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை அரசியல் செல்வாக்கை தருகிறா, இல்லையா என கவலையில்லை. அந்த மக்களுக்கு ஏதாவது செய்ய முடியுமென்றால் செய்யவேண்டும். இதை புளொட் என்ற ரீதியில் தொடர்ந்தும் இதைதான் செய்து வந்திருக்கின்றோம்.

நாடாளுமன்றத்தில் இருந்த போதும், இல்லாதபோதும் நாம் செய்துவருகின்றோம். இதுதவிர, நாங்கள் மாத்திரமில்லை. சிவசக்தி ஆனந்தன் எம்.பியை எடுத்துக்கொண்டால் அவருக்கும் அரசால் 5 கோடி ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியில் கேமடுவில் ஒரு வீதி திருத்துகிறார்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன் சொன்னார். ஆனால் அவர் ஒரு பிழை விட்டார். அதனை தன்னுடைய கட்சிகாரனுக்கு சொல்லவில்லை. இதனால் சிவசக்தி ஆனந்தன் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இதான் உண்மை. இதையெல்லாம் ஒரு அரசியல் ரீதியான கருத்தாகவே நான் பார்கிறேன்.

சமஷ்டி கேட்ட எங்களுக்குச் சமுர்த்தி மக்களுக்கு கிடைக்கின்ற தென்றால் அதை வேண்டாம் என்று விட முடியாது. அதையும் பெற வேண்டும். சமஷ்டியையும் கேட்க வேண்டும். இதான் என்னைப் பொறுத்தவரை எமது கட்சியைப் பொறுத்தவரை அடிப்படைக் கொள்கை - என்றார். (ஜ-100)

## வாகரையில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாடுகள் தொடர்பில் அறிவுறுத்தும்வகையிலும் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் வகையிலும் மக்கள் சந்திப்பு பாலர் பாடசாலைக் கட்டடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மக்கள் சந்திப்பு நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எஸ்.சோமசுந்தரம், நிர்வாக உப செயலாளர் ஆ.ஆலாலசுந்தரம், சட்டவிவகார உப செயலாளர் ரூபா சுவேந்திரன், ஊடகம் மற்றும் செயற்றிட்ட ஆக்க உப செயலாளர் த.சிற்பரன், இளைஞர் அணி இணைப்பாளர் எஸ்.கிருஸ்ணமீனன், மத்திய குழு உறுப்பினர் இரா.மயூரன், மாவட்ட அமைப்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கதிரவெளிப் பிரதேசத்தில் இடம்பெறுவரும் இல்மனைட் அகழ்வு சம்பந்தமாக மக்களால் கருத்து தெரிவிக்கப் பட்டதுடன், இதன் விவரங்கள் தொடர்பாக அறிக்கையும் மக்களால் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான க.வி.விக்னேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதாகவும், இதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான க.வி.விக்னேஸ்வரன் மக்களின் வாக்குறுதி வழங்கினார். (ஜ)

## ஒரு சமூகத்தை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திட்டமிடலினை நடமாடும் சேவை நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் ஐக்கியம் வேண்டுமானால் அனைத்து இனங்களுக்குள்ளும் சமத்துவம் ஏற்படவேண்டும். ஒரு பகுதி வளரும்போது இன்னுமொரு பகுதி வளராமல் இருந்தால் சமத்துவமோ, ஐக்கியமோ வராது.

எனது ஒதுக்கீடுகள் எங்கு குறைகள் அதிகமாக இருக்கின்றதோ அங்கே தான் செல்லும். எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கும். ஒரே பகுதிக்குச் சென்று நிறைய வளங்கள் சேருவதும் வேறு சில பகுதிகளுக்கு ஒன்றுமே கிடைக்காமல் இருப்பதும் பிழையான விடயமாகும்.

எமது மொழியின் வரலாற்றினை, பெருமையினை நாங்கள் உரக்கப் பேசவேண்டும். அதேபோன்று சகோதர இனத்தவர்கள் மீதும் அக்கறை கொள்ள வேண்டும். அவர்களையும் அரவணைக்கவேண்டும். ஆனால் அரவணைப்பதாகக் கூறிக் கொண்டு அவர்களின் காலடியில் கிடப்பதை ஏற்கமுடியாது - என்றார். (ஜ)

## வேட்பாளர்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

இதுவரையில் எமது அணியில் வேட்பாளர் தெரிவுக்கு ஐவரது பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

எமது அணியில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் தீர்மானத்துக்கு அமைய ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கை எமக்குக் காணப்படுகின்றது.

உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியிலே ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. எமக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றங்கள் எதுவும் இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் வெற்றி பெற ரணில் அரசு தற்போது பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. தேர்தல் வெற்றிக்காக இம்முறை மேற்கொள்ளப்படும் தந்திரங்கள் செல்லுபடியாகாது - என்றார். (ஜ)

காலைக்கதிர் Kalaikathir



# பொதுஜன பெரமுனவின் கூட்டணியில் 15 அரசியல் கட்சிகள் இணைகின்றன!




மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைப்பதற்கு 15 அரசியல் கட்சிகள் தயாராகவுள்ளன எனவும் எதிர்வரும் 26 ஆம் திகதி இந்தப் புதிய கூட்டணியில் அக்கட்சிகள் கையொப்பமிடவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 11 ஆம் திகதி தலைமையை மஹிந்தர் ஏற்கிறார் அன்றே ஜனாதிபதி வேட்பாளரையும் அறிவிப்பார்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைப்பதற்கு கட்சிகள், அமைப்புக்கள் அடங்களாக 26 குழுக்கள் விருப்பம் தெரிவித்துள்ளன எனவும், இதில் கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிய கட்சிகளும் காணப் படுகின்றன எனவும் பொதுஜன பெரமுன கட்சி வட்டா ரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்த கட்சியின் தலைமைத்துவம் எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷவிடம் கைமாறவுள்ளதாவும் தெரிவிக்கப்படு கின்றது. தற்பொழுது அக்கட்சியின் தலைவராக பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உள்ளார்.

கட்சியின் தலைமைத்துவம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்து மஹிந்த ராஜபக்ஷவினால் கட்சிக் கூட்டத்தில் அறி விக்கப்படவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷவினால் அறிவிக்கப்படவுள்ள ஜனாதிபதி வேட்பாளர் எதிர்வரும் 12 ஆம் திகதி அனு ராதபுரம் ஜயஸ்ரீ மகாபோதி உட்பட சமயஸ்தலங்களுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார்.

இந்த நிகழ்வுகளில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையில் இயங்கும் கூட்டு எதிரணியுடன் இணைந்து செயற்படும் சகல கட்சிகளின் தலைவர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ள னர் எனவும் கூறப்படுகின்றது.

# பிரிட்டனில் கறுப்பு ஜூலைக் கொடூரத்தின் நினைவழியா நிகழ்வுகள்



*1983 ஜூலையில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப் படுகொலைக் கொடூரத்தின் 36 ஆவது வருட நிறைவு நினைவை ஒட்டி நேற்று மாலை பிரிட்டனில் வெஸ்ட்மினிஸ்டரில், இலக்கம் 10, டவுனிங் வீதியில் உள்ள பிரிட்டிஷ் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்னால் புகலிடத் தமிழர்களினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்.*

# நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கை ஓகஸ்ட். 23இல்!



கொழும்பு, ஜூலை 22

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங் கரவாத தாக்குதல் தொடர்பில் ஆராயும் நாடாளும ன்ற தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்படவுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனை வெளியிடுவதற்கான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவுக் குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் எதிர் வரும் 24 ஆம் திகதி (நாளை மறுதினம்) முற்பகல் 10.30 முதல் மாலை 6.30 வரை சாட்சி பதிவுகள் இடம்பெறவுள்ளன.

# பட்டதாரிகள் 16 ஆயிரம் பேருக்கு இம்மாத இறுதியில் அரச நியமனம்

## அமைச்சர் கபீர் ஹாசிம் தகவல்



நாட்டிலுள்ள பட்டதாரிகள் 16 ஆயிரம் பேருக்கு இம்மாத இறுதி யில் அரச துறைகளில் நியமனம் வழங்கப்படும் என அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் நகரில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

தமிழ் மொழி பேசும் பட்டதாரி களுக்கும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மூன்று மாத காலப் பகுதியில் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐந்து பேரில் ஒருவரே ஜனாதிபதி வேட்பாளர்

## கூறுகிறார் ஜோன் அமரதுங்க

பிரதமர் ரணில் விக்ரம சிங்க, சஜித் பிரேமதாச, பாட்டளி சம்பிக்க ரணவக்க, தயா கமகே மற்றும் கரு ஜயசூரிய ஆகிய ஐந்து பேரில் ஒருவரே ஜனாதிபதி வேட்பாளர் என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளருக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருவர் மோதிக் கொள்கின்றனர் எனவும் இது குறித்து தங்களின் நிலைப்பாடு என்னவெனவும் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதி லளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார். (ஐ)

# 20 இற்கும் மேற்பட்ட இலங்கைப் படகுகள் இந்தியா, மாலைதீவு கரைகளில் ஒதுங்கின

இலங்கையின் 20இற்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் மாலைதீவு மற்றும் இந்தியத் தீவுப் பகுதி களில்நங்கூரமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலுக்காக பயணித்த இந்தப் படகுகள், சீரற்ற காலநிலை காரணமாகவே அந்தக் கடற்பகுதி களுக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவற்றை அங்கிருந்து மீட்பதற்கான பணிப் புரைகள் விடுக்கப்படவில்லை எனக் கடற்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இழுவைப்படகுகளுடன்தினமும்தொலைத் தொடர்பு முறைமையில் தொடர்பை ஏற்படுத்தி உரையாடிவருவதாககடற்தொழில்திணைக்கள இயக் குனர் ஜெனரல் கினிகே குமார தெரிவித்துள்ளார்.

இலங்கையை சூழவுள்ள கடல் பிராந்தியங்களில் காலநிலை தொடர்ந்தும் அசாதாரண நிலையில் உள்ளதால், மாலைதீவு மற்றும் இந்திய கடற்பரப் புக்களில் தரித்து நிற்குமாறு அந்தப் படகுகளை சார்ந்தவர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.07.2019 இல் வெளியிடப்பெற்றது.